JANAVINODINI.

ஜநவிநோதிநி.

இல. 10, 11.] {அக்டோபர்மீ நவம்பர்மீ} 1882. [புஸ்த. XIII.

CONTENTS.

A Bridge of One Hundred Arches 215
The History of Napoleon.... 219
How a Bird Flies ?.......... 227
A Funny Story 231
The True Gentleman, how distinguished 238
A Hundred Years ago 250
On The Veracity of the Hindus 253
News 255

அட்டவணை.

நூறுகண் பாலம்—ஒருகதை....... 215
நெப்போலியன் சரித்திரம் 219
பறவைகள் பறப்பதெப்படி? 227
விதியை மதியால் வெல்லக்கூடுமா? 231
மேன்மக்கள் என்பவர் யார்?...... 238
நூறுவருஷங்களுக்குமுன்னே 250
இந்துக்கள்உண்மைபேசுகிறவர்களா 253
சமாசாரம் 255

MADRAS:

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

TO OUR READERS.

In commencing a new volume of *Janavinodini*, we bid all a hearty welcome to its pages, and wish to remind them that, while the seasons pass quickly by, here we are still at our post, unchanged at least in one thing—our desire to please and interest our readers as far as we can; and the knowledge that our readers think kindly of us and of our work performed under difficulties will give us fresh energy for the coming year. Every month we shall put in something in the pages of *Janavinodini* adapted for nearly all ages, as well as interesting stories fitted for home use.

This Magazine requires now as much support as it is possible to secure, and this may be given in three ways; (1) By annual subscriptions *paid in advance*, and special donations for providing suitable pictures to charm the young more than ever; (2) By making the Magazine more widely known with a view to give it a larger circulation both in Town and Country; and (3) By literary contributions suited to the pages of the Magazine.

We take this opportunity to thank the able writers who during the past year kindly contributed some useful papers to *Janavinodini*, and hope that we shall continue to receive more of such co-operation in the year which has begun.



A BRIDGE OF ONE HUNDRED ARCHES—நூறுகண் பாலம்.

ஜநவிநோதிநி.

இல. 10, 11.] { அக்டோபர்மீ / நவம்பர்மீ } 1882. [புஸ்த. XIII.

நூறுகண் பாலம்—ஒரு கனா.

இச்சஞ்சிகையுடன், மிருசா தன் உவமைதரிசனையிற்கண்ட நூறுகண் பாலத்தின் வடிவைச் சித்திரித்துச் சேர்த்திருக்கிறோம். அதன் காட்சியைப்பற்றி மிருசா சொல்லிய விதமாவது:—

ஒருநாள் தியானம்பண்ணும்பொருட்டு மலைமேல் ஏறிப்போனேன். மலை உச்சியில் இளைப்பாறி வருங்காலத்தில், மானிடஜன்மத்தைக்குறித்துச் சிந்தனைபண்ணி, மனிதன் நிழலுக்கும், ஜீவன் சொப்பனத்துக்கும் சமானம் என்று சொல்லி எழுந்தேன். அப்பொழுது எனக்கு நேராய் ஒரு பெரும்பாறையின்மேல் இடையனைப்போல் உடைதரித்திருந்த ஒருவர் எதிர்ப்பட்டு, எனக்குச் சைகைகாட்டி என்னைத் தாம் உட்காந்திருந்த இடத்திற்கு வரும்படி அழைத்தார். நான் கிட்டப்போய், இவர் யாரோவென்று பயந்து, அவர் பாதத்தில் விழுந்து அழுதேன். அந்தப் பெரியவர், முகமலர்ந்து என்னைப் பூமியினின்றும் எடுத்து, என் பயத்தை ஆற்றி, கையைப் பிடித்துக்கொண்டு, மிருசாவே! நீ தனித்துப் பேசினதைக் கேட்டேன்; என்னைப் பின்தொடர்ந்துவா, என்று சொல்லி, மலையில் எல்லாவற்றுக்கும் மேலான சிகரத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அதன்மீது உட்காரவைத்து, கிழக்கே கண்ணோக்கிப்பார்த்து, உனக்குக் காணப்படுகிறதைச் சொல்லென்றார்.

அவர் சொன்னவண்ணமே பார்த்தேன்; கிழக்கே விரிவான ஒரு பள்ளத்தாக்கும், அதில் ஓர் பெரியவெள்ளமும் காணப்பட்டன. அவற்றை நான் கண்டு சொல்லக்கேட்டு அவர், அந்தப் பள்ளத்தாக்குத் துக்கமும், அதில் ஓடுகிற வெள்ளம் நித்தியமென்னப்பட்ட பெருங்கடலில் ஒரு பங்குமாம் என்றார். இந்த வெள்ளம், ஓர் இருண்ட மேகத்தினின்றும் உற்பத்தியாகி, மற்றோர் இருண்ட மேகத்திற்போய் மறைகிறதே அதற்குக் காரணம் என்னவென்று கேட்டேன். அதற்கு அவர் நீ காண்கிற வெள்ளம் நித்தியத்தின் ஓர் பாகம்; அதற்குக் காலசக்கரம் என்று பெயர். அது சூரியனால் அளக்கப்பட்டு உலகம் தோன்றினதுமுதல் முடியுமட்டுமிருக்கும். அதற்கு முதலிலும் கடையிலும் இருள் சூழ்ந்திருப்பது அதன் ஆதி

யந்தங்களைக் கண்டவர் எவருமில்லையென விளக்குகிறது. இச் சமுத்திரத்தை உற்றுப்பார்த்து இதிலே நீ காணுகிறதைச் சொல் என்ருர். வெள்ளத்தின் நடுவில் ஒரு பாலம் காண்கிறேன் என்றேன். நீ காண்கிறபாலம் மனிதருடைய ஆயுள்; அதை அவதானித்துப் பார் என்ருர். நான் அதை அவதானித்துப் பார்த்தபோது, அந் தப் பாலத்துக்கு முழுமையாய் எழுபதுகண்களும், இடிந்துபோய்ச் சில கண்களும், ஆக உத்தேசம் நூறு கண்கள் இருக்கிறதாகக் கண் டேன். அந்தக் கண்களை நான் எண்ணிக்கொண்டிருக்கையில் அவர், ஆதியில் இந்தப் பாலத்துக்கு ஆயிரங்கண்கள் இருந்தனவென்றும், இப்போது இருப்பவைதவிர மற்றவைகளையெல்லாம் ஒரு பெரிய வெள்ளம் வந்து வாரிக்கொண்டு போயிற்றென்றும் சொன்ஞர்.

இன்னும் அந்தப் பாலத்தின்மீது என்ன காணப்படுகிறது சொல் என்ருர். அதன்மேல் திரளான ஜனங்கள் நடக்கவும், அந்தப் பாலத் தின் இருகரைகளிலும் இருண்ட மேகங்கள் இருக்கவும் காணப் படுகின்றன என்றேன். இன்னும் அதிகமாக உற்றுப்பார்த்தபோது, அந்தப் பாலத்தின்மேல் நடக்கிறவர்களில் அநேகர், பாலத்துக்கு அடியில் ஓடுகிற வெள்ளத்தில் விழுந்துகொண்டிருக்கக் கண்டேன். இதென்ன காரணமென்று சோதிக்கிறபொழுது, அந்தப் பாலத்தில் அளவிறந்த பொறிகள் மறைந்திருக்கிறதாகவும், நடக்கிறவர்களு டைய கால் பட்டவுடனே அப்பொறிகளின் கதவுகள் திறந்து, அவர் கள் கீழே வெள்ளத்தில் விழுந்து மறைவதாகவும் தெரியவந்தது.

இந்தப் படுகுழிகள் பாலத்தின் துவக்கத்தில் அதிக நெருக்கமா யிருந்தபடியால், கூட்டங் கூட்டமாக மேகத்திலிருந்து புறப்பட்ட வுடனே அநேகர் அவைகளுக்குள் விழுந்துவிட்டார்கள். அந்தப் பொறிகள் பாலத்தின் இடையில் குறைந்தும், கடைசியில் முழுக் கண்கள்வரையும் போகப்போக அதிகமாக நெருங்கியும் இருந்தன. அப்பால் இடிந்த கண்களின்மீதும் சிலர் நொண்டி நொண்டி நடந்து போஞர்கள். ஆயினும் அவர்கள் அவ்வளவு தூரம் நடந்துபோனத ஞல் இளைப்படைந்து ஒவ்வொருவராக விழுந்தார்கள்.

இந்த அதிசயமான கூட்டத்தையும், அதில் தோன்றும் பல புதுமைகளையும், சற்றுநேரம் உற்றுப்பார்த்துச் சிந்தனைசெய்தேன். பலர் நிர்விசாரமாய்ச் சிரித்து விளையாடிக்கொண்டிருக்கையில் சடிதி யாய்க் கீழே விழுந்துபோஞர்கள்; அப்படி விழுந்துபோகையில் தப்பும்படிக் கைக்கெட்டும் எந்தப் பொருளையும் பிடித்துக்கொள்ள முயன்ருர்கள்; அதைப்பார்க்க எனக்கு மிகவும் துக்கம் உண்டா யிற்று. சிலர் தியானம்பண்ணுகிறதுபோல் வானத்தை அண்ணந்து பார்க்கையில் தவறிவிழுந்து மறைந்துபோஞர்கள். மற்றும் அநே கர் தங்கள் கண்களுக்குமுன்னே பளபளப்பாய் எழுந்து அசைந் தாடுங் குமிழிகளைத் தொடர்ந்து எட்டிப்பிடிக்கிற சமயத்தில் கால் தப்பிக் கீழேவிழுந்து முழுகிப்போஞர்கள்.

இவ்வாறு குழப்பமாயிருக்கையில், சிலர் பட்டாக்கத்திகளைக் கையிற்பிடித்துப் பாலத்தின்மேல் இங்கும் அங்குமாக ஓடி, பொறிகளில்லாத மார்க்கமாகப் போகிறவர்களைக் குத்திப் பொறிகளிலே விழும்படித் தள்ளிக்கொண்டிருக்கிறதையும் பார்த்தேன். அப்படிப் பலாத்காரமாகப் பொறிகளில் தள்ளப்படாத பட்சத்தில் அவர்கள் அப்பொறிகளினின்றும் தப்புவார்கள்.

எனக்கு இந்த அதிசயங்களைக் காண்பித்த மகானுபாவர், பின்னும் உனக்கு விளங்காதது ஏதாகிலும் உண்டா என்று கேட்டார். அப்போது என் கண்களை ஏறெடுத்துப் பார்த்தேன்; கழுகுகள், காகங்கள், கூகைகள் முதலிய சிறகுகளையுடைய பல பறவைகள் பாலத்துக்குமேலே ஆகாயத்தில் பறக்கிறதும், பாலத்துக்கு மத்தியில் கூட்டங்கூட்டமாக இறங்குகிறதுமாக இருப்பதைக் கண்டு, இதன்பொருள் என்னவென்று கேட்டேன். அதற்கு அவர் இவையெல்லாம் மனிதர்களுக்குக் கவலைகளையுண்டாக்கித் துன்பப்படுத்துகிற பொருமை, பொருளாசை, வீண்பத்தி, ஏக்கம், காமம் முதலியவைகளேயாம் என்ருர்.

அதுகேட்டு நான் பெருமூச்செறிந்து, ஐயோ! மனிதன் வாழ்வு பொய்யாக இருக்கிறதே; அவன் பலவிதமான சஞ்சலத்திலாழ்ந்து, உயிரோடிருக்குமட்டும் வேதனைக்குட்பட்டு, கடைசியில் மாண்டு போகிருனே என்றேன்.

அந்தப் பெரியவர் என்மீது இரக்கமுற்று, இனி நீ மனிதன் நித்திய விபூதியை அடையும்பொருட்டுச் செய்யும் யாத்திரையின் முதற்பாகமாகிய இப்பிரபஞ்ச வாழ்க்கையைப் பார்ப்பதைவிட்டு, நெடுங்காலமாய் விழுந்தவர்களை அடித்துக்கொண்டுசெல்லும் வெள்ளம் இருண்டமேகத்தில் மறைகிறதே அதைப் பார் என்ருர்.

அவர் கட்டளையிட்டபடி கண்ணேக்கிப் பார்த்தேன். அந்த மகானுபாவரானவர் சுபாவத்திற்கதிகமான சத்தியை என் கண்களுக்கு உண்டாக்கிப் பலப்படுத்திஞரோ, அல்லது முன் என் கண்கள் பார்க்கக்கூடாதபடி நின்ற இருண்ட மேகத்தை விலக்கிஞரோ தெரியவில்லை; அந்தப் பள்ளத்தாக்குக்கப்புறம் ஓர் பெரிய கடல் இருக்கிறதையும், அதன் நடுவில் ஓர் பெரிய வச்சிரப்பாறையானது ஒரு முனையிலிருந்து மற்ருெரு முனைவரையும் அதை இரண்டு சமபாகங்களாகப் பிரிக்கிறதையும் கண்டேன்.

அதன் ஒரு பாகத்தில் இருண்ட மேகங்கள் இன்னும் நின்றமையால் அப்பங்கில் உள்ளவை எனக்குத் தெரியவில்லை; மற்ருெரு பாதியோ, பழங்களும் புஷ்பங்களும் நிறைந்து, ஒளிவீசுகின்ற பல சிறுகடல்களால் சூழப்பட்ட எண்ணிறந்த திட்டுகளையுடைய ஓர் விரிவான சமுத்திரமாக எனக்குத் தோற்றினது. அவ்விடத்தில் மனிதர்கள் உயர்ந்த ஆடையாபரணங்களையணிந்து, பூமாலைகளைத் தரித்து, மரங்களின்கீழ் உலாவித்திரிந்தும், அருவிகளின் ஓரமாக

உட்காந்தும், புஷ்பமஞ்சங்களின்மீது சயனித்தும் இருப்பதைப் பார்த்தேன்; பாடுகிற பறவைகளின் கூச்சலும், ஓடுகிற அருவிகளின் ஓசையும், மனிதர் குரலும், வாத்தியங்களின் முழக்கமும், ஒன்று கூடிய பேரொலியையும் கேட்டேன். இப்படிப்பட்ட இன்பமான காட்சியைக் காணவே எனக்கு அதிகசந்தோஷம் உண்டாயிற்று. சிறகுகளிருந்தால் அவ்வளவு ரம்மியமான இடத்திற்குப் பறந்துபோகலாமே என்று நினைத்தேன். அப்போது அந்தப் பெரியவர், பாலத்தின்மேல் ஒவ்வொரு க்ஷணமும் திறந்துகொண்டிருக்கிற மரணத்துவாரந்தவிர அவ்விடத்திற்குப் போக வேறுவழியில்லை என்றார்.

உன் கண்ணுக்கெட்டுகிறவரையிலும் அந்தச்சமுத்திரத்தின் மத்தியில், நக்ஷத்திரங்களைப்போல் புதுமையாகவும் பசுமையாகவுமிருக்கிற அத்திட்டுகள், கடற்கரையிலிருக்கும் மணலைப்பார்க்கிலும் அதிகமாக இருக்கும்; நீ இங்கே பார்க்கிற திட்டுகளுக்கப்புறம் உன் கண்ணுக்கும் மனத்துக்கும் எட்டாத தூரத்தில் பலகோடி தீவுகளிருக்கின்றன; அவைகளெல்லாம் நல்லோர்கள் தேகவியோகமானபின் வசிக்கும் மாளிகைகள். அவரவர்கள் செய்த புண்ணியத்துக்குத்தக்கபடி அவரவர்கள் இத்தீவுகளில் இடம்பெறுகிறார்கள். அத்தீவுகளில் வசிப்பவர்களுடைய நிலைமைக்கும் விருப்பத்துக்கும் தக்கவாறு அவர்களுக்கு வேண்டியவைகளெல்லாம் அவ்விடங்களில் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு திட்டும் தன்னில் வசிப்பவருக்குத் தகுந்த மோக்ஷவீடாக இருக்கிறது. ஓ! மிருசாவே! இவ்விருப்பிடங்கள் நாம் வருத்தப்பட்டுச் சம்பாதிக்கத்தக்கவைகளல்லவா? இத்தன்மையான மறுமைப்பயனைப் பெறுதற்கிடமான மனிதஜந்மம் சஞ்சலமுள்ளதென்று தோன்றுகிறதா? உன்னை இவ்வளவு மேன்மையான நிலைமைக்குக் கொண்டுபோகும் மரணம் அஞ்சத்தக்கதா? இப்படிப்பட்ட நித்திய ஐசுவரியத்தை எதிர்பார்க்கும் மானிடஜந்மம் பயனற்றதென்று நினைக்காதே என்றார்.

சொல்லிமுடியாத ஆநந்தத்தோடு இவ்வளவு இன்பந்தரும் திட்டுக்களைச் சற்றுநேரம் உற்றுப்பார்த்துப் பிறகு, ஐயா! இந்தப் பெருங்கடலில் அந்த வச்சிரப்பாறைக்கு மற்றோர்பக்கத்தில் இருண்ட மேகத்தால் மறைக்கப்பட்டிருக்கும் இரகசியங்களைக் காண்பித்தருளும் என்றேன். அந்தப் பெரியவர் மறுமொழியொன்றும் சொல்லாமலிருந்ததனால் மறுபடி அவரைக் கேட்கும்பொருட்டு அவரைத் திரும்பிப்பார்த்தபோது அவர் மறைந்துபோய்விட்டார். உடனே அதுவரையிலும் என் மனத்தைக் கவர்ந்துகொண்டிருந்த தோற்றமும் மறைந்துபோய்விட்டது. ஓடும்வெள்ளமும், பாலமும், ரம்மியமான திட்டுகளும் மறைந்துபோய், ஆதியில் நான் பார்த்த பள்ளத்தாக்கும் அதன் பக்கத்தில் மேய்ந்துகொண்டிருந்த ஆடுமாடுகளும் ஒட்டகங்களுமே காணப்பட்டன.

நெப்போலியன் என்னும் போர்வீரன் சரித்திரம்.

நெப்போலியன் போனபார்ட்டு என்னும் பெயரைக் காதினுல் கேட்கையிலேயே ஐரோப்பா கண்டத்துச் சிறுபிள்ளைகள் அனைவரும் அஞ்சி நடுங்குவார்கள். அச்சிறு போர்வீரன் கோடைகாலத்து மின்னல்போல் ஒன்றின்பின் ஒன்ருய் அதிதுரிதமாகப் பெற்ற பல பெருமைகளும், அற்புதமான பல வெற்றிகளும் விளங்குமாறு எழுதிய விசித்திரமான சரித்திரங்களை எடுத்துப் படிப்பவன் எவனும் உள்ளத்தில் ஒருவிதமான நடுக்கங் கொள்ளாதிரான். அப்போர்வீரன் முதலில் இவ்வுலகவாழ்க்கையிலே புகுந்தபோது, அவனுக்குப் புகழும் பெருமையும் விளைவிக்கத்தக்க விசேஷம் அவனிடத்தில் ஒன்றுமில்லை. அவன் உயர்குலத்தில் பிறந்தவனுமல்ல, செல்வப்பெருமையுடையவனும் அல்ல. ஆயினும் அவன் இடையிற் கைவிடாது உழைக்குந்திறமையும், எதற்கும் இணங்கிப் பின் வாங்காத மனவுறுதியுமாகிய இவைகளாலேயே உலகசரித்திரத்தில் தனக்கு இணை எவனுமில்லாத உயர்வுபெறலானுன். அந்த மகாசூரன் தன் தைரியவீரிய சவுரியபராக்கிரமங்களால், இவ்வுலகத்தோர் அனைவரும் கண்டு மகிழ்ந்து வியப்பதுமாத்திரமேயன்றி வானோர்களும் வியக்க, வானுறவோங்கி வளம்பெறவளர்ந்த அழியாப் பெரும்புகழ்மண்டபமொன்று சமைத்தனன். ஆயினும் அவ்வற்புதமான மகாமண்டபமும் இறுதியில் விதியின்பயனுல் பெரும் காற்றுமழைபொழிந்து, ஒருகால் அது மேன்மைபெற்று விளங்கியது என்பதற்கு அறிகுறி அவ்விடத்து மண்மேடுதவிர மற்றென்று மில்லாதபடி நிர்மூலமாகிவிட்டது.

நெப்போலியன் மத்தியதரைக்கடலில் இத்தாலியாதேசத்தைச் சேர்ந்ததாய் பிரஞ்சுக்காரருக்குச் சுவாதீனமான கார்ஸிகா என்னும் தீவிலே 1769-ஆு ஆகஸ்டுமீ 15உ பிறந்தவன். அவன் சாதாரணமாகச் சிறுபாடசாலையொன்றில் படித்தவனேயொழிய விசேஷமாகக் கல்விகற்றவனல்லன். தான் எப்போதும் எதற்கும் அஞ்சாதவன் என்றும், ஆரவாரமும் சண்டைசெய்யும் குணமுமுடையவன் என்றும் நெப்போலியன் தன்னைப்பற்றித் தானே சொல்லியிருக்கிறுன். தனக்குச் சரிவயதான மற்றப் பிள்ளைகளைப்போல நெப்போலியனும் வெளியேதிரிந்து விளையாடுவதில் நோக்கங்கொண்டவனேயொழியக் கல்விகற்பதில் அத்தனையாகக் கருத்துடையவனன்று. ஆயினும் அவன் பன்னிரண்டாம் வயதிலே போர்வீரர்க்குரிய வித்தியாசாலை ஒன்றில் புகுந்து அதிக ஆவலோடு கற்கத்தொடங்கி, கணிதசாஸ்திரத்திலும், போர்வீரர்கள் முக்கியமாய்க் கற்கவேண்டிய மற்ற சாஸ்திரங்களிலும் மிகத் தேர்ச்சிபெற்ருனென்கிருர்கள். அக்

காலத்தில் அவன் அதிகமாய் எவரோடும் கூடாமல் தனித்துக் கல்வி கற்பதிலேயே கண்ணுற்றிருந்தானுகையால் அவனுக்கு அதிகமாக நேசர்களில்லை; ஆயினும் தன்னுடன் படிக்கும் பிள்ளைகளிடத்தில் அவன் எப்போதும் விசேஷமாய் அதிகாரம்செலுத்திவந்தான். அப் பிள்ளைகள் தாம் ஆடுகிற ஆட்டங்களில் அவனையே தலைவனுக நிய மித்துக்கொள்வார்கள். ஒருகால் மாரிகாலத்தில் நெப்போலியன் தன் சகபாடிகளைக்கொண்டு பனிக்கட்டிகளால் வெகுவிசித்திர மான கோட்டையொன்று நிருமிக்கச்செய்து, பிறகு தான் அந்த வித்தியார்த்திகளை இரண்டுவகுப்பாகப் பிரித்து, ஒரு வகுப்பினர் அதைத் தாக்கவும், மற்றொரு வகுப்பினர் அதைக் காக்கவும் ஏற்பா டுசெய்து போர்புரிந்து தாக்கக் கட்டளையிட்டான். அவ்வண்ணமே போர் மிக உக்கிரமாய் நடந்தேற, கடைசியில் இருவகுப்பினரும் ஒத்துவந்து போரொழிந்திருக்கச் சமாதானம்செய்துகொள்ளும்படி யாயிற்றென்று ஸர் வால்தர் ஸ்காட்டு சொல்லியிருக்கிறுர்.

பதினுன்குவயதானபிறகு நெப்போலியன் பிரான்ஸ்தேசத்துப் பாரிஸ்நகரத்திலுள்ள ஒரு போர்ச்சேவகர் பாடசாலை போய்ச்சேர்ந் தான். அங்கிருக்கையில் நெப்போலியனிடத்தில் அதிக ஆதரவுள்ள வனுன அவனுடைய தந்தை தேகவியோகமாயினுன். அவனுடைய குடும்பம் பெரிதாயினும் அதற்கு வேருதரவு ஒன்றுமில்லை. நெப் போலியன் தன் தந்தைக்கு இரண்டாவது மகன். அப்போது அவனுக் குப் பிராயம் பதினுறு. மறுவருஷத்தில் அவன் ஒரு பீரங்கிப்பட்டா ளத்தில் இரண்டாவது லெவ்டெனென்டு என்னும் அதிகாரியாக ஒரு உத்தியோகம்பெற்றுன். இது நடந்த சிலவருஷங்களுக்குப் பிறகு அத்தேசத்து ராஜாங்கத்தில் குடிக்கலகமுண்டாகி அப்போது மிகவும் மும்முரமான நிலையிலிருந்தது. நெப்போலியனுடைய தாய் நல்ல வடிவழகும் தைரியமும் உள்ள ஒரு பெண்மணி. அத் தேசத்துக் கலகத்துக்கு அவளும் ஒரு நிமித்தமாயிருந்தமைபற்றி அவள் அத்தேசத்திலிருக்கக்கூடாமல் ஓடிப்போம்படி நேரிட்டது. அவ்வண்ணமே அவள் தன் சிறுகுழந்தைகளோடுகூட வீட்டைத் துறந்து வெளியே ஓடிக் கடற்கரையிலுள்ள ஒரு காட்டிற்பதுங்கிக் கொண்டு, அங்கேயே இரண்டுநாள் இரவும்பகலும் வருந்திக்கொண் டிருந்தாள். பிறகு அத்துறையில் வந்திறங்கின பிரஞ்சுக்காரரு டைய போர்க்கப்பலிலிருந்தவர்கள் கண்டு அவர்களை அவ்வருத் தத்தினின்றும் விடுவித்தார்கள். அவளுக்கு அத்துன்பம் நேரிட்ட காலத்தில் அண்டையிலிராமல் வெளியேபோயிருந்த ஜோஸேப், நெப்போலியன் என்னும் அவளுடைய இரண்டு பிள்ளைகள் அந்தக் கப்பலில் வந்திறங்கினுர்கள்.

பிறகு கார்ஸிகாவில் நிலையும் பதியும் அமையுமென்ற ஆசை யில்லாமற்போனதனுல் அவர்கள் அவ்விடம்போவதைவிட்டு நேராகப் பிராஞ்சுதேசத்துக்குச் சென்று, அங்கே நிற்கநிலையும்

தங்கத்தாவுமின்றிப் பரதேசிகளாய், பரதேசிகளுக்கு அளிக்கும் பிச்சைக்குக் கையேந்திக்கொண்டு அல்லாடினார்கள். ஆயினும் சீக்கிரமே அத்தேசத்தில் நெப்போலியனுடைய அண்ணனான ஜோஸெப்புக்கு ஒரு உத்தியோகம் கிடைத்தது. இதற்கு இடையில் நெப்போலியனுடைய வீரியசவுரிய பராக்கிரமங்கள் டோலன் கோட்டையைப் பிடித்தகாலத்தில் விசேஷமாக விளங்கியதுபற்றி அவன் மிகவும் பிரசித்திபெற்றவனாகி ஜெனரல் அவ் பிரைகேட் (general of brigade) என்னும் பெரிய அதிகாரம்பெற்றுச் சிலகாலம் மேன்மேலும் பெருமையடைந்துவந்தான். இப்படியிருக்க அவ்வாட்சிக்குத் தலைவனாயிருந்தவன் தோற்றுப்போகவே நெப்போலியனைப் பிடித்துச் சிறைசெய்தார்கள். ஆயினும் அவன் மெல்லத் தந்திரமாய்ச் சிறையினின்றும் வெளிப்பட்டு வீடுவாயிலில்லாமல் வெளியேதிரிந்துகொண்டிருந்தான். மறுபடியும் அதிர்ஷ்டம் அவன் பக்கத்தில் திரும்பியது. அவனுடைய சாமர்த்தியங்களெல்லாம் அத்தேசத்தார்க்கு முன்னமே தெரியுமாதலால் அவர்கள் அவனைத் தேடிப் போர்ச்சேனைகளுக்குத் தலைவனாக நியமித்துக்கொண்டார்கள். அவ்வதிகாரம் பெற்றபிறகு நெப்போலியன் கலகக்காரர்களையெல்லாம் அடக்கிப் பகைவர்களை வென்று, அத்தேசத்து அரசாங்கத்துக்குத் தான் இன்றியமையாத் துணையெனத் தெரியக்காட்டினான்.

இது நடந்த சிலமாதங்களுக்குப்பிறகு (1796-ஆம் மார்ச்சுமீ) நெப்போலியன் ஒரு அழகியான பெண்ணைக் கலியாணம்செய்துகொண்டு அவளுடைய செல்வாக்கினால் இத்தாலியாதேசத்துச் சேனைகளுக்குச் சேனைத்தலைவனாய் இருக்கும் ஓர் அதிகாரம் பெற்றான். அவனுடைய அதிர்ஷ்டம் நல்வழியில் திரும்புவதற்கு இதுவே ஆரம்பமாயிற்று. ஒன்றின்பின் ஒன்றாய் அவன் சென்றவிடமெல்லாம் சத்துருக்கள் தோல்வியடைந்து வெற்றியுண்டாகத் தலைப்பட்டது. அவனுடைய வீரியசவுரியதைரிய பராக்கிரமங்களையும் சேனைகளை நடத்துவதிலுள்ள சுருக்கையும் கண்டு அவனுடைய எதிரிகளெல்லோரும் அஞ்சினார்கள். ஒருமாதத்திற்குள் அவன் ஆல்ப்ஸ்மலையைக் கடந்துபோய்த் தன் படைகளைப் பார்க்கிலும் மிகப் பெரிதான எதிரிப்படையைவென்று மூன்றுயுத்தங்களில் ஜயங்கொண்டான். ஆஸ்திரியாதேசத்துப் படைகளை ஒரு செயலும் செய்யவொட்டாதபடி அடக்கினான். ஸர்டீனியா தேசத்துச் சேனையை எறக்குறைய முற்றும் நாசமாக்கினான். அதனால், இவ்வண்ணம் பிறதேசங்களிற்போய் ஜயம்பெற்று வெகு சிறப்புடன் திரும்பிப் பாரிஸ்நகரத்துக்கு வரும்போது எப்படிப்பட்ட வீரர்களுக்கும் மகாவீரன் இவனேயென்று ஆநந்தித்து அனைவரும் அவனைக் கொண்டாடினார்கள். அவ்விதமான பெருமை முற்காலத்திலாயினும் தற்காலத்திலாயினும் எத்தன்மையான போர்வீரனுக்கும் நடந்ததில்லை.

உலகத்துக்கெல்லாம் ஒளிதந்து அனைவர்க்கும் மகிழ்ச்சியும் உல்லாஸமும் அளிக்கின்ற ஜோதிமயமான சந்திரனுக்கும் ஒரு களங்கமுண்டாயிருப்பதுபோல, அத்தனைசிறப்பும் பெருமையுமாய்ப் புகழ்பெற்றுவந்த நெப்போலியனுக்கும் அவ்வாரம்ப தசையிலேயே ஒரு களங்கம் உண்டாயிற்று. அதாவது தான் அபஜயப்படுத்திய பிரஜைகளிடத்தினின்றும் பொருள்பறிப்பதாம். திரவியம் ஒன்றுமாத்திரமேயல்ல; அவரவர்கள் தெய்வம்போலப் பாவித்துத் தங்கள் உயிரைப்பார்க்கிலும் பெரிதாகநினைத்துப் பரிபாலித்துவந்தசித்திரம் பிரதிமைமுதலிய நிதிகளையும்அபகரித்தான். அவன் அவ்வாறு செய்ததனால், பிரஞ்சுதேசத்தார்க்கு ஒருவிதமான அபகீர்த்தியுண்டாயிற்று. அவ்வண்ணமே நாநாதேசங்களிலுமுள்ள புதுமையான பொருள்களையெல்லாம் ஒன்றுய்ச் சேர்க்கவேண்டுமென்ற பேராசைகொண்டு அவர்கள் பாரிஸ்நகரத்தில் பல பொருட்காட்சிசாலையொன்று ஏற்படுத்தி, அதில் நெப்போலியன் அபகரித்துக்கொண்டுவந்த பொருள்களையெல்லாம் வைத்து அலங்கரித்தார்கள். ஆயினும் அப்பொருள்கள் நெடுநாள் அவர்கள்வசத்தில் இருக்கவில்லை. அநியாயமாய் அபகரித்துக்கொண்டுவந்த அப்பொருள்களையெல்லாம் பிரஞ்சுக்காரர் 1815-ஆத்தில் அவரவரிடம் திருப்பிக் கொடுத்துவிடும்படி நேரிட்டது.

பின்பு சிலமாதகாலம் நெப்போலியன் அமைதியாய்ப் பாரிஸ் நகரத்திலேயே வஸித்துக்கொண்டிருந்தான். ஆயினும் அவன் முதலில் ஒருதரம் வெற்றிபெறுவதில் உண்டான ரசத்தை உருசிபார்த்தவனாதலால் அமைதியாயிருக்கப்பிடியாமல், பின்னும் பலவிடங்களில் வெற்றிபெறவேண்டுமென விருப்பமுடையவனாகி, 40,000 சேனைகளுடன் எகிப்துதேசத்தை ஜயிக்கவேண்டுமெனக் கருதி அத்தேசத்துக்குப் போகக் கப்பலேறினான். அங்கிருந்து போகும் வழியில் மால்டா என்னும் தீவைப் பிடித்துக்கொண்டு, எகிப்துக்குப்போய் அங்கே ஒரு யுத்தம்செய்து அதில் ஜயமடைந்து, ஸிரியாதேசத்தின்மேல் படையெடுத்தான். யோவநாகரத்தை முற்றுகைசெய்து அதன் குடிகளைக் கொலைபுரிந்து ஏகர் நகரத்தை முற்றுகைசெய்ய முயன்றான். ஆயினும் ஸர் ஸிடினி ஸ்மித் என்பவரால் நடத்தப்பட்ட அங்கிலேயப் படைகளால் எதிர்க்கப்பட்டு எகிப்து தேசத்துக்குத் திரும்பி ஓடிப்போகலானான். அங்கே அவனுடைய சேனைகள் வழிநடப்பதனாலாகிய வருத்தம், பஞ்சம், கொள்ளை நோய்முதலிய துன்பங்களால் சங்கடப்பட்டனவென்றாலும், நெப்போலியனுடைய தைரியத்தினாலும் அவன் முன்னின்று மாதிரிகாட்டியதனாலும் அபொகீர்நகரத்தில் மறுபடியும் ஒரு யுத்தம்செய்து ஜயம்பெற்றன. இதற்கிடையில் அவனுடைய சேனையெல்லாம் நெல்ஸன் என்னும் சேனாபதியால் நடத்தப்பட்ட அங்கிலேயருடைய சேனைகளால் அநேகமாய் அழிக்கப்பட்டபடியால், ஒருவர்க்

கும் தெரியாமல் நெப்போலியன் ஒளிப்பாட்டமாய்ப் பிராஞ்சுதேச த்திற்கு ஓடிப்போகக் கப்பலேறினுன். இது நடந்தது 1799-ஞ அக்டோபர் மாதத்தில். அப்படிப் போகையிலும் பிராஞ்சுதேசத்தார் அவனை மிகுந்தமகிழ்ச்சியோடு வரப்பெற்றுக்கொண்டார்கள். பின்பு ஒருகால் அத்தேசத்தில் ஆக்ஷிமாறுதலுண்டாக, அப்போது நெப்போலியனுக்கு அத்தேசத்து ஆக்ஷிக்கு முதல்தலைவனென்னும் அதிகாரம் அளிக்கப்பட்டது. அவ்வதிகாரம் பெற்று நெப்போலியன் அத்தேசத்தில் பல முக்கியமான திருத்தங்கள் செய்தானபிறகு, பின்னும் ஒருதரம் தன்னுடைய பராக்கிரமம் பெற்ற படைகளை யுத்தத்திற்கு நடத்தினுன். இந்தத் தடவை அவன் மிகவும் பனிமூடிய ஆல்ப்ஸ்மலைத்தொடரின் வழியாய்ச் சேனைகளை நடத்திக்கொண்டுபோனுன். உலகத்திலுள்ள யுத்தசரித்திரங்களில் இது மிகவும் ஸாகஸமானதும் அனைவரும் அதிசயிக்கத்தக்கதுமாம். அத்தனை வீரத்தனமாகச் சேனைகளை நடத்திக்கொண்டுபோய் 1800-ஞத்திலே மரங்கோ என்னும் இடத்தில் மிகச் சிறந்த வெற்றிபெற்று இத்தாலியாதேசமுழுமைக்கும் அவன்தானே அதிபதியாயினுன்.

இவ்வண்ணம் இவ்வுலகில் சாதாரணமான மனிதர் எவர்க்குமில்லாத உயர்வுபெற்று, அவ்வளவோடு திருப்தியடைந்து தான் அத்தனை அருமையாகப் பெற்ற ஜயத்தைத் தன் பிரஜைகளுடைய சவுக்கியத்தை விருத்திசெய்யும் விஷயத்தில் உபயோகித்துவருவானுனுல், அவனுக்கு அது ஒரு அழியாச்செல்வமாகவே அமைந்திருக்கும். “எதையும் நன்றுகாணத்தக்க கண்ணும், எதற்கும் அஞ்சாமல் துணிந்துசெய்யும் சூரத்தனமும் அவனிடத்தில் இருந்தன. அவன் தற்செயலாகவே ராஜபதம் பெறுவதற்கேற்ற பெருமைகளைப் பெற்று வந்தான்; ஆயினும் அவன் எல்லோர்க்கும் மேலான பதத்திற் போய்ச் சேரவே ஒரு புறமும் பார்க்கத்தோன்ருமல் அவனுடைய கண் கூச்சமுற்றது, மதிமயக்குற்றது. உலகத்தில் மற்றப் பிரஜைகளுக்குள்ள குறைபாடொன்றும் தனக்கு இல்லையெனவும், மனிதர்களுக்குள் தான் ஒருவகைத் தெய்வம்போன்றவனெனவும், தனக்கு எவரும் எவ்விதமான துன்பமும் செய்யவல்லவர்கள் அல்லவெனவும் எண்ணிப் பெருமையடையலானுன்” என ஒருவன் நெப்போலியனைப் பற்றி மொழிந்திருக்கிருன். இவ்வாறு அவன் வீணுசைகளுக்கு அடிமையானுன். அவன் மனோரதங்கள் ஒவ்வொன்ருய் நிறைவேற நிறைவேற, மேன்மேலும் மனோரதங்கள் அதிகமாகத் தலைப்பட்டன. தன் எதிரிகளை வஞ்சனைசெய்து தன் சேனைக்கு உற்சாகம் உண்டாக்கவேண்டுவது அவசியமென்று ஒரு சாக்குச் சொல்லிச் சேனைகளில் பொய்ச்செய்தி பரவவிடக் கட்டளையிட்டான். அந்தச் சூது நியாயத்திற்கு ஒவ்வாததாய் இருப்பதோடுகூட விவேகமற்றதாயும் இருக்கின்றது. ஏனெனில், அப்படிப்பட்ட செய்கை ஒருதரம் உண்மை கண்டறியப்படுமாயின், பின்பு

எவரேனும் அவனுடைய வாய்மொழிகளை நம்புவார்களா? அவனுடைய செய்கைகளுள் மற்றொரு அநியாயச்செய்கையாவது டெங்கின் என்னும் அரசனை அநியாயமாய்க் கொலைசெய்ததாம்.

பின்பு 1804-ஆ மேமீ நெப்போலியன் பிரஞ்சுராஜ்யத்துச் சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பட்டான். அப்படித் தனக்கு முடிசூட்டுவதற்காக அவன் 8-வது பயஸ் என்னும் மதாசாரியனை (Pope) நிர்ப்பந்தம் செய்து பாரிஸ்நகரத்துக்கு வரவழைத்தானாயினும், ராஜமுடியை அவர் கையைக்கொண்டு அணிந்துகொள்வதைக்கூடப் பொறுதவனாகி அதைத் தானேபிடிங்கி முதலில் தன் தலையிலே வைத்துக்கொண்டு பிறகு தன் பெண்சாதியினுடைய தலையில் அமைத்தான்.

ஆனாலும் நெப்போலியனிடத்தில் நாம் அனைவரும் கண்டு கொண்டாடவேண்டிய பெருங்குணமொன்று உண்டு. அதாவது, தன் குடும்பத்தினிடத்தில் அதிக அபிமானமாம். ஆயின் அந்த அபிமானம் தற்பெருமை அகங்காரம் இவற்றோடு பிணைக்கப்பட்டிருந்தது. தன் குடும்பத்தாரனைவரையும் ராஜாங்கத்தில் சிறந்த செல்வாக்குள்ள அதிகாரிகளாக்கவேண்டுமெனக் கருதி அதற்காகப் பிறரைக்கெடுத்துத் தம்மவரைச் செல்வவான்களாக்க வாய்க்கும் தருணங்களை எதிர்பார்த்திருந்து, தருணம்நேருந்தோறும் அதைத் தவறவிடாமல் தன் கோரிக்கையை நிறைவேற்றிவந்தான். உயர்ந்த அதிகாரம் பெறுவதற்குத் தகாதவர்களாயிருந்தும் தம்மவர்களை அவன் படிப்படியாய் உயர்த்திச் சிறந்த அந்தஸ்தும் அதிகாரமும் உடையவர்களாக்கினான். அதற்குமுன்னமே தன்னுடைய சகோதரனை ஜோஸேப் என்பவனை நேபில்ஸ் நகரத்துக்கு அரசனாக்கினான்; லூவிஸ் என்பவனை உலாந்தாதேசத்துக்கு அரசனாக்கினான். அதுமாத்திரமேயன்றி ஐரோப்பாவில் புராதனமும் செல்வத்தில் பெரியதுமான ஒரு ராஜ்யத்தைக் கைப்பற்றக் கருதி சார்லெஸ் என்னும் அரசனுக்கும் அவன் மகனுக்கும் கலகமுண்டான தருணங்கண்டு அதில் தான் புகுந்து ஜோஸேப் என்பவனை ஸ்பானியாதேசத்துக்கு அரசனாக்க முயன்றான்; ஆயினும் அத்தேசம் எளிதில் அவனுக்குக் கைவசப்படவில்லை. அப்போது ஸ்பானியாதேசத்தார்க்குத் துணையாக அங்கிலேயர் தமது பெரும்படையை அனுப்பவே, அந்தத் தீபகற்பத்தில் நெடுநாள் மிகக் கொடியதாக யுத்தமொன்று நடந்தது. இதற்குப்பிறகு, முன் நெப்போலியன் பெருமையும் புகழும் பெறவேண்டுமென்னும் ஓயாது அதிகமாகின்ற பெருந்தாகத்தைத் தணிப்பதின்பொருட்டு அநேகமாயிரம் உயிர்களையும் அளவிறந்த பொருள்களையும் பறிகொண்டதுபோல் இனிமேலும் பறிகொள்பவனாவான் என்று ஒருபொழுதும் எவராலும் எண்ணப்பட்டதாகத் தோன்றவில்லை.

இதுவரையில் அடைந்த வெற்றிகளோடும் திருப்தியடைந்திராமல் நெப்போலியன் பிறகு ருஷியாதேசத்துக்குப் போய்ப் போர்புரியவேண்டுமெனத் தீர்மானித்தான். அவ்விஷயத்தில் தன் தேசத்து ஜனங்களுக்கு அதிக ஆவலுண்டாகத் தூண்டிவிட்டு 50,000 சேனைகளைச் சித்தம்செய்து 1812-ஆம் ஜூன்மீ 24உ தன் படைகளோடு நீமன் நதியைக் கடந்துசென்றான். நெப்போலியன் படையெடுத்து வருவதைப்பார்த்து ருஷியர்கள் ஓட்டம் பிடித்தார்கள். ருஷியா சக்கரவர்த்திமாத்திரம் மாஸ்கோ நகரத்துக்கு ஓடி, அவரவர் தம்மைத்தாம் பத்திரமாய்க் காத்துக்கொள்ளும்படி தன் குடிகளுக்கு எச்சரிக்கை மொழி ஒன்று எழுதி எங்கும் விளம்பரம்செய்தான். அப்போது அந்தக் கொடியயுத்தத்தில் பயங்கரமான ஜீவவதைகள் நடந்ததும், மாஸ்கோ நகரம் எரிக்கு இரையானதும், கொள்ளைகளும் கொலைகளும் அளவிறந்து உண்டானதும், கடைசியாய்ப் பிரஞ்சுப்படைகள் மிகவும் தொகைகுன்றி, அழிக்கப்பட்ட எதிரிகளின் நாட்டின் வழியாய்த் தோற்று ஓடிப் போனதுமாகிய வரலாறுகளை யெடுத்தெழுத இங்கு இடமில்லை. ஒருவாரத்துக்குள்ளேயே 30,000 குதிரைகள் மடிந்தன. மிகுந்து பட்டினியாய்க் கிடந்த மற்றச் சேனைகள் தமக்குத் தின்னத் தம் பிணமாவது கிடைத்தாற்போதுமென்று ஆவல்கொண்டன. அநேகமாயிரம் படைகள் நடுவழியே மாண்டுபோயின. அந்தப் படைகள் போனவழி முழுதும் வெளேலென்று விழுந்துகிடந்த எலும்புக் குவியல்களே பிற்பாடு அப்படைபோன வழியைக் கண்டுகொள்வதற்கு ஏற்ற குறிப்பாயிருந்தன.

நெப்போலியனுடைய அபஜயத்திற்கு இதுதான் ஆரம்பம். அவனுக்கு அந்த யுத்தத்தில் அப்படிப்பட்ட பராஜயம் உண்டானது கண்டு, அதுவரையில் அவனால் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டிருந்தவர்கள் எல்லோரும் தைரியமடைந்தவர்களாகி, யாவரும்ஒன்றாய்க்கூடி அவனை எதிர்க்கலானார்கள். மறுபடி நெப்போலியன் மற்றொரு யுத்தத்தில் தோற்று அவர்களால் மேற்கொள்ளப்பட்டவனாகி, உடனே பிரான்ஸ்தேசத்துக்கு ஓடி தன்னால் கூடியவரையில் தன் தேசத்தைக் காத்துக்கொள்ள முயன்றான். ஆயினும் அவனுக்குத் தன்தேசமும் தக்கவில்லை. ஒன்றாய்க் கூடிய பல தேசத்துப் படைகளும் திடமான மனவுறுதியோடு மெல்லமெல்ல எதிர்த்துச் சென்று கடைசியாய் அவனைச் சூழ்ந்துகொள்ள, பாரிஸ்நகரமானது காத்துக்கொள்வோர் இல்லாமல், எதிரிகளுக்கு அடிமையாகிவிட்டது. கடைசியாய் 1814-ஆம் எப்ரல்மீ 4உ நெப்போலியன் தன் சிங்காதனத்தைத் தானே எதிரிகள் அதீனத்தில் ஒப்புவிக்கலானான். ஆயினும் ஜயம் கொண்டவர்கள் நெப்போலியனைச் சக்கரவர்த்தியென்னும் பட்டப் பெயரோடேயே காலங்கழிக்கச் சம்மதித்து 400 போர்வீரர்களை அவனுக்குக் காவலாளராக ஏற்படுத்தி, எல்பாவென்னும் தீவில்

வசித்துக்கொண்டிருக்கச் செய்தார்கள். ஆயினும் கொடுங்கோலனை நெப்போலியன் பிடிபட்டானென்ற சந்தோஷச்செய்தி முற்றும் செம்மையாய்ப் பரவுவதற்கு முன்னமே அந்தச் சக்கரவர்த்தி எல்பா தீவிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடி எவர்க்கும் தெரியாமலே மாயையினுல் சிருஷ்டித்ததுபோலத் தன் அதீனத்தில் அளவற்ற சேனைகளைச் சேர்த்துக்கொண்டான். அவனுடைய உண்மையான பெருந்தன்மை அவனுக்கு விபத்துநேர்ந்தகாலத்திலேதான் நன்ருய்க் காணப்பட்டது. கடைசியாய் அவன் தன் உயிர்க்கும் துணிந்து ஒரு பெரும் போர்செய்ய முயன்றகாலத்தில் விளங்கிய வளவு புத்தியின் திறமை மற்றெந்தக்காலத்திலும் அவனிடத்தில் விளங்கியதில்லை. ஆயினும் அவையனைத்தும் கடைசியில் பயன் படாமல் வீணுய்ப்போயின.

1815-ஆ ஜூன் ௴ 18௳ அங்கிலேயர் பிரஷியர் இவர்களுடைய கூட்டுப்படையினுல் இவ்வுலகமெங்கும் பிரசித்தமான வாடர்லூ யுத்தத்தில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டான். அதற்குமுன் இருபதுவருஷகாலமாக ஐரோப்பாமுழுதும் உதிரமும் கண்ணீரும் ஓயாது சிந்திக்கொண்டிருக்க நடந்த பல கொடிய யுத்தங்களுள் இதுவே கடைசியானதாம்.

பின்பு நெப்போலியன் அங்கிருந்து தப்பித்துக்கொண்டு அமெரிக்காதேசத்துக்கு ஓடிப்போக முயன்ருன், சாத்தியப்படவில்லை. அதனுல் கடைசியில் நிராசைகொண்டு தன் உடலை அங்கிலேயர் வசம் ஒப்புவிக்கத் தீர்மானித்தான். அங்கிலேயர் அவனைப் பிடித்து விசாரணைசெய்து ஆயுள்முழுதும் அவனைத் தண்ணீர்மேலேற்றித் தேசாந்தரம் அனுப்பிவிடுகிறதெனத் தீர்மானித்து, ஸெண்டு ஹெலீனுவென்னும் ஒரு தனித்தீவிற்கு அனுப்பி அவ்விடத்திலேயே அவனை வெகு பத்திரமாய்க் காத்துவந்தார்கள். அவ்விடத்திலேயே நெப்போலியன் சில வருஷகாலம் வெகு நிர்ப்பந்தமான காவலிலிருந்து 1821-ஆ மே ௴ தேகவியோகமானுன். அந்தியகாலத்தில் அவனுடைய கதி இப்படி மிகப் பரிதாபமாக முடிந்ததென்ருலும், அவன் தான் பெருமைபெற்றிருந்தகாலத்தில், எல்லாவற்றையும் ஆள்கின்ற மனச்சாக்ஷியின் வலிமைக்கும் அடங்காததான புத்திவலிமையும் மனவுறுதியும் இத்தன்மையதென்று அதற்கு ஒருபோதும் அழியாத உதாரணங்களை உலகில் நாட்டிவைத்தான். அவன் வாழ்ந்த காலத்தில் அவன் முயன்ற ஒவ்வொரு முயற்சியும் தவருது நிறைவேறி அவனுக்குப் பேரும் புகழும் பேராட்சியும் அளித்துவந்ததாயினும், பேராசையினுல் கடைசியில் அவனுக்கு இக்கதியாயிற்று. அதிக ஆசை அதிக நஷ்டமல்லவா?

பறவைகள் பறப்பதெப்படி?

ஆதிகாலம் தொடங்கி நாநாதேசத்துக் கவிகளும் பறவைகள் பறப்பதைப் பலவிதமாக வர்ணித்துச் சொல்லியிருக்கின்றனர். "அவன் காற்றிலே பறக்கிறான்," "பறப்பான் பயிரிழந்தான் அறக் காஞ்சி பெண்டிழந்தான்," "பறக்கிற எச்சிற்கலையில் கல்லைத்தூக் கிவைத்தாற்போல்" என்றிப்படிப் பல உவமைச் சொற்களும் அது காரணமாகவே உலகில் வழங்கலாயின.

பறப்பது என்ற சொல்லைக் கேட்கும்போதே நம்மனதில் ஒரு விதமான மகிழ்ச்சியுண்டாகின்றது. ஒரு பெரிய நதி பருவதப்பிர தேசங்களில் உற்பத்தியாகி அங்கிருந்து காடுகளிலும் நாடுக ளிலும் சுற்றிச் சுழன்று கடலுட்போய்ச் சேருகின்ற வழியைக் காண நமக்கு எவ்வளவு களிப்பு உண்டாகின்றது? அவ்விதமா கவே பறவைகள் ஆகாயத்தில் ஓடுகின்ற விநோதத்தைச் சற்று உற் றுப்பார்ப்போமாயின், அதைப்பார்க்கிலும் அதிகமாக களிப்புண் டாகும். பறவைகள் அநேகம் ஆகாயத்தில் பறந்தோடுகின்றனவே. அவை எவ்விடத்திற்குச் செல்லுகின்றனவோ நாம் அறியோம். நாம் பல பக்ஷிகளை விநோதமாய்ப் பிடித்து வளர்க்கிறோமே. அவைகட்கு, அழகிய வடிவமும் விசித்திர வர்ணமான ரக்கைகளும் இருந்தாலும், பறக்கும் திறமையொன்றுமாத்திரம் இல்லாதிருக்குமாயின் அப் போது அவற்றினிடத்தில் நமக்கு அத்தனை ஆசையுண்டாகாதல் லவா? இந்த அதிசயமான சக்தியொன்றினாலேயே பறவைகள் மற் றப் பிராணிகள் எல்லாவற்றையும் அதிசயித்திருக்கின்றன. அதுகார ணமாகவே மனிதர்கள் தமக்கு அவ்வற்புதமான திறமையில்லையென் பதை ஒரு பெருங்குறையாக நினைத்து, அவைகளைப்போலத் தாம் ஆகாயத்தில் பறந்துபார்ப்பதற்கு வேண்டிய உபாயங்களைக் கண்டுபி டிக்கவும், அதற்கேற்ற யந்திரங்களை நிருமிக்கவும் பலவாறு முயன்றி ருக்கிறார்கள். ஆதலால் பறவைகள் பறக்கும் விதத்தைப்பற்றி விசா ரிப்பது அனைவர்க்கும் இன்பந்தருவதாகும். பறப்பதென்றால் ஒரு ஜீவஜந்து தன் ரக்கைகளின் உதவியால் ஆகாயத்தில் சஞ்சரிப்பதெ ன்று பொருளாகும். இந்தப் பொருளைக்கொண்டு பார்த்தால், கும் மட்டம் ஆகாயத்தில் பறக்கிறதென்று சொல்வது சரியன்று. கும் மட்டம் ஆகாயத்தில் காற்றின் செயலால் ஓடுவதேயன்றித் தன் சொந்த முயற்சியால் பறப்பதன்று.

பறப்பது என்னும் சொல்லின் கருத்தை நாம் தெளிவாய்த் தெரிந்துகொள்வதற்குமுன் பக்ஷிகளின் உருவமைப்பை ஒருவாறு விசாரிப்போம். இப்போது பறவைகளின் எல்லா உறுப்புகளை யும்பற்றி விசாரிப்பது அவசியமன்று. தலை, கழுத்து, கால் இவை

கள் பறப்பதற்குக் கருவியான உறுப்புகளல்லவென்பது அனைவர்க்கும் தெரிந்தவிஷயமேயல்லவா? பக்ஷிகளின் உடல் எவ்விதமான தடையுமில்லாமல் ஆகாயத்தில் ஊடுருவிச் செல்வதற்கு ஏற்றவண்ணமாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. அவ்வுடலின் மேற்புறம் முழுதும் அணுவளவும் மூலைமுடுக்கு மேடுபள்ளம் ஒன்றுமில்லாமல் எங்கும் ஒரே சரியாகச் செய்யப்பட்டிருக்கின்றது. அதற்குக் காரணம் உடலின்மேற் பொருந்திய இறகுகளெல்லாம் அத்தனை ஒழுங்காய் அமையுமாறு வெகு நுட்பமாய்ச் சேர்க்கப்பட்டிருப்பதேயாம். அந்த இறகுகளெல்லாம் வித்தியாசமின்றிப் பின்புறமாயே திருப்பி அமைக்கப்பட்டிருக்கின்றன. பறக்கிற சமயத்தில் அவைகள் பறவைகளின் உடலோடு அதிக நெருக்கமாய்க் கடித்துக் கொள்கின்றன. பறக்கும்போது பார்த்தால் பறவைகளின் உடல் மார்பண்டை பருத்து வாற்புறம் சிறுத்து முட்டைவடிவமாகக் காணப்படும். அப்போது தலையும் கழுத்தும் உட்புறமாய் இழுத்துக்கொள்ளப்பட்டாவதிருக்கும்; வெளியே நீட்டப்பட்டாவதிருக்கும். அவ்வண்ணமே கால்கள் பின்புறமாய் நீட்டப்பட்டாவது இருக்கும், உடலுக்குள் இழுத்துக்கொள்ளப்பட்டாவது இருக்கும். புரு, கிளி, குயில் முதலிய பாட்டுப் பாடுகின்ற பறவைகளும் இவை போன்ற இன்னும் பல பறவைகளும், கால் கீழே தொங்குவதனால் பறப்பதற்குத் தடையுண்டாகாதபடி, பறக்கும்போது அவற்றை உடலுக்குள் இழுத்துக்கொள்கின்றன; கொக்கு நாரை முதலிய நீரில் நீந்துகின்றவைகளான நீண்ட கால்களுள்ள பறவைகளெல்லாம் இரண்டு கால்களையும் ஒரே அளவாய்ப் பின்புறமாக நீட்டிக் கொள்கின்றன. அதனால் முன்புறத்தில் சாதாரணமாய் அந்தப் பக்ஷிகளுக்குள்ள நீண்ட கழுத்தின் பளுவுக்குப் பின்புறமாய் நீட்டிய காலின் பளுவு எதிரெடையாகின்றது. பறவைகளெல்லாம் பறக்கும்போது தம்முடலின் மையநிலை (centre of gravity) இரண்டிரக்கைகளுக்கும் நடுவிலுள்ள ஓரிடத்தில் அமையும்படியாக நின்று பறக்கின்றன. ஆனால் எப்பொழுதும் அவற்றின் மையநிலையதுவல்ல, தோளுக்குப் பின்னால் ஓரிடமாம். இவ்வண்ணம் பக்ஷிகளின் தேகத்தினளவு சமயத்துக்குத் தக்கபடி வெவ்வேறு விதமாயிருக்கவும், பக்ஷிகளின் உடல் அதன் பரிமாணத்துக்கேற்ற பளுவுள்ளதாயிராமல் இலேசாயிருக்கவும் ஏற்றவிதமாய் அமைக்கப்பட்டிருப்பது எத்தனை விசித்திரமானது!

இதற்கு இரண்டுவிதமான காரணங்களுண்டு. முதலில் ஏறக்குறைய எல்லாப் பறவைகளுடைய எலும்புகளும் குழல்போல் போலானவை. ஆனால் சிறிய எலும்புகள் வெகுவாய் அப்படியில்லை. காலெலும்புமுதலிய நீண்ட எலும்புகளெல்லாம் முற்றும் போலாகவாவது, உள்ளே ஒருவிதமான நிணம் அமைக்கப்பட்டாவது இருக்கின்றன. அதனால் அவ்வெலும்புகளுக்குள் காற்று புகுந்துகொண்டி

ருக்கின்றது. ஆனதுபற்றிப் பறவைகளின் எலும்புகள் கூடியவரை இலேசாகவேயிருக்கின்றன. முலைப்பாலுண்டு பிழைக்கின்ற பிராணிவர்க்கங்களுக்கும் பாம்புமுதலிய ஊர்வனவற்றிற்கும் எலும்புகள் கெட்டியாயிருப்பதால் கனமானவையாம்.

இரண்டாவது, பக்ஷிகளின் உடம்பிலே பலவிடங்களில் இரண்டிரண்டாய்ப் பல பெரிய பைகளிருக்கின்றன; முக்கியமாய் அடிவயிற்றில் அநேகம் உண்டு. அவை யாவும் உள்ளே காற்று கொள்ளத்தக்கவைகள். அவை ரத்தநாடிகளின்மூலமாய் சுவாஸப்பைகளோடு சம்பந்தப்பட்டிருப்பதனால் சுவாசப்பைகளினின்றும் காற்று அவற்றுள் சுலபமாய் வந்தடையும். மேலும் முன்கையெலும்புமுதலிய சில பெரிய போலான எலும்புகளுக்குள் உள்ள குழாய்க்கும் சுவாஸப்பைகளுக்கும் சம்பந்தமுண்டு. அதனால் அவ்விதமான எலும்புகளுக்குள்ளும் காற்றுவந்தடையும்.

இவ்விஷயத்தைப் பலதரம் பரிசோதித்து அறிந்திருக்கிறார்கள். ரக்கையறுந்து கீழே விழ்ந்த பக்ஷியைப் பிடித்து அதன் வாயையும் மூக்கையும் ஒருமிக்க மூடிவிட்டுப்பார்க்கையில், அது மூச்சுத்திணறாமல் அப்போதும் சுலபமாய் மூச்சுவிட்டுக்கொண்டிருக்கக் காணப்பட்டிருக்கிறது. எலும்புகளிலுள்ள துவாரங்களின் வழியாய் சுவாஸப்பைகளுக்குள் பறவைகள் காற்றை ஏற்றுக்கொள்ளும்படி இருப்பதனால் அப்படியாகின்றது. மேலும் பறவைகளின் உடலிலுள்ள ரத்தம் மற்றப் பிராணிகளின் உடலிலுள்ள ரத்தத்தைப் பார்க்கிலும் அதிக உஷ்ணமானது. ஆனதுபற்றி அவற்றின் தேகத்தில் சுவாஸப்பைகளிலும் மற்றும் பல ரந்திரங்களிலும் உள்ள வாயு அந்த ரத்தத்தின் சூட்டினால் தானும் சூடாகி, அதனால் தன் இயற்கைப்படி அதிகமாய்ப் பரவ, அதைக் கொண்டிருக்கும் பைகள் உருவம் பெருக்கின்றன. பெருத்தால் உடல் தன்னளவுக்கு அதிக லேசாகின்றது.

இயற்கையில் இவ்விதமாய் அமைந்திராமல், பறவைகள் தாமே முயன்று சுவாஸப்பைமுதலிய தம்முடம்பிலுள்ள ரந்திரங்களையெல்லாம் சூடாகிப் பரவிய காற்றைக்கொண்டு நிரப்பவேண்டுமென்றால் எவ்வளவு கஷ்டசாத்தியமாகும்! காக்கை புறாமுதலிய சாதாரணமான சிறுபறவைகளுக்கே காற்றுப்பைகள் பல கன அங்குலமளவு பருத்தவைகளாயிருக்கின்றன. இந்த அளவைக்கொண்டு பார்ப்போமாயின் இப்பறவைகளை ஒரு சிறிய கும்மட்டத்துக்கு ஒப்பாகச் சொல்லலாம். இந்தச் சூடுகொண்ட காற்று எதையும் உயரக்கிளம்பும்படி செய்கின்றது. ஆயினும் இந்தக் காற்றானது பறவையின் உடலை இலேசாக்குமேயொழிய அதை நன்றாய்ப் பறக்கும்படி முற்றும் கிளப்பமாட்டாது. ஏனெனில், அரை பவுண்டு எடையுள்ள ஒரு பறவையைத் தூக்குவதற்குப் பல கனஅடி அளவுள்ள அனற்காற்று அவசியமாம். அடியிற் காட்டும் உதாரணத்தால்

இவ்விஷயம் மிகத் தெளிவாய் விளங்கும்: நன்ருய்ப் பழகிய ஒரு பறவையைத் தராசில் வைத்துக் கருத்தாய் நிறுத்தார்கள். நிறுக்கும் போது மிகப் பெரிதுமல்லாமல் சிறிதுமல்லாமல் நடுத்தரமான ஒரு பக்ஷி சாந்தமாயுட்காந்திருக்கையில், ஐந்து அவுன்ஸ் எடையுள்ளதாய் இருந்தது. பிறகு சிறிது தூரத்திலிருந்து ஒருவர் அதைக் கூவியழைக்கும்படி செய்து, அதைக் கேட்டு அப்பறவை ரக்கையை விரித்துக் கொண்டு பறக்கச் சித்தமாகி இருந்த விடம்விட்டுக் கிளம்பாமலே இருந்த தருணத்தில் நிறுத்தார்கள். பக்ஷி நின்ற தட்டு முன்னளவுக்கு அப்போது கொஞ்சம் மேலே தூக்கிற்று. இதற்குக் காரணம் என்னவென்ருலோ, பறவைகள் தாம் பறக்க எழும்பொழுதுதான் தம் தேகத்திலுள்ள காற்றுப்பைகளைச் சூடுகொண்ட காற்றிஞல் நிரப்புகின்றன. அதனுல் அவற்றின் தேகம் அப்படி இலேசாகின்றதென்னவேண்டும். இப்படி பறவைகளின் உடல் இலேசாகவும் மறு நிமிஷத்தில் அது எழுந்தோடவும் ஏற்றவண்ணமாய் அவற்றின் உடல் அத்தனை அற்புதமான விதமாக நிருமிக்கப்பட்டிருக்கின்றது.

பறவைகள் எவ்வளவு அதிக தூரம் பறக்கவேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு தமது தேகத்தை இலேசாக்கிக்கொள்ளவேண்டுவது அவசியமாதலின், தாம் பறக்கவேண்டிய தூரத்துக்கேற்றபடி தம்முடலிலுள்ள காற்றுப்பைகளுள் காற்றை அளவிட்டு அமைக்கின்றனவெனப் பல சோதனைகளால் கண்டறியப்பட்டிருக்கின்றது.

இதை யோசிக்கையில், பறவைகளை ஆவியால் உயரக்கிளம்பும் கும்மட்டத்துக்கு ஒப்பாகச் சொல்லலாம். இப்படி இந்தச் சூடான காற்று பக்ஷியை ஒருவாறு இலேசாக்குகின்றதாயினும், அந்தக் காற்றே பறவைகள் பறப்பதற்கு முதற்காரணம் என்று கொள்ளலாகாது. இரக்கைகளின் வேலையில் ஒரு பகுதியை அது ஏற்றுக்கொள்கிறதேயொழிய மற்றப்படியல்ல. மேலும் மிகப் பெரியபைகள் பறவைகளின் அடிவயிற்றிலேயே இருப்பதால், அவைகள் காற்றிஞல் உப்பும்போதெல்லாம் பக்ஷிகளின் தேகத்து மையநிலை முன்புறமாய் மாற்றப்படுகின்றது. இவ்வண்ணமாகப் பறவைகள் பறக்கும் போது தம்முடலைச் சூடுகொண்ட காற்றிஞல் நிரப்பி இலேசாக்கிக்கொண்டு எளிதில் உயரக்கிளம்பிச் சுலபமாய்ப் பறந்தோடுகின்றன. வாயுமண்டலத்தில் எழுந்து உலாவும்படி அத்தனை இலேசாக நமது உடலும் நிருமிக்கப்பட்டிருக்குமாயின், அப்போது நாம் வேண்டும்போதெல்லாம் இவ்வுலகமுழுதும் பறந்துபோய் நொடிப்பொழுதில் அங்கங்குள்ள அதிசயக் காட்சிகளைக் கண்டு களித்து வரக்கூடுமல்லவா? இப்பொழுது சாதாரணமாய் இருக்கையிலேயே மனிதர்கள் ஒருவர்க்கொருவர் பல பொல்லாங்குகள் செய்யப் புகுந்திருக்கையில், ஆகாயத்திற் பறக்கும் அற்புதமான திறமையும் உண்டானுல் எப்பாடுபடுவார்களோவென்று அஞ்சியே அந்தத் திறமையைக் கடவுள் அவர்களுக்கு அளிக்கவில்லைபோலும்.

விதியை மதியால் வெல்லக்கூடுமா?

(ஒரு விநோதகதை.)

முற்காலத்தில் சிம்மளதேசத்திலே சோமநாதனென்று ஒரு மனிதன் இருந்தான்; அவன் மிகவும் எளியவன். தரித்திரன் வீட்டில் பிள்ளைகளுக்குப் பஞ்சமா? அவனுக்குப் பிள்ளைகள் பன்னிரண்டு. கையில் ஒரு காசுகூடக் கிடையாது. ஐயோ பாவம்! பேதைப்பிள்ளைகள் பசியால்வருந்திப் புலம்பத்தொடங்கின. அதற்கு இன்னது செய்கிறதென்று தோன்றாமல் சோமநாதன், அவன் பெண்சாதி இவர்களிருவரும் மனந்தவித்து விசனமுற்றார்கள். கடைசியில் சோமநாதன் தன்னை அவ்விதமாக வருத்துகிற விதியின்மேல் கோபங்கொண்டவனாகி, "ஆ! இதென்ன கேடுகெட்டதெய்வம்! மரம்வைத்தவன் தண்ணீர்வார்க்காமல் போகானென்று உலகவழக்கு உண்டே! அக்கணக்குமின்றிப் பாழுந்தெய்வம் எனக்குப் பல பிள்ளைகளைக் கொடுத்து அவர்களைப் போஷிக்கப் பொருள் ஒன்றும் கொடாமலிருக்கின்றதே! இதென்ன விபரீதகாலம்!" என்று தெய்வத்தை வெறுத்துக்கொண்டு, இனி இங்கிருப்பதில் பயனில்லை; விதியைப்போய்க் கண்டு இதற்கு வழியின்னதென்று கேட்டுத் தெரிந்துகொண்டு வரவேண்டுமெனத் தீர்மானங்கொண்டு விதியைத் தேடிப் போகப் புறப்பட்டான். அவன் போகையில் வழியே நடுக்காட்டில் ஒரு ஒட்டகம் முதுகின்மேல் தான் சுமக்கமாட்டாத இரண்டு பெரிய பொன் நாணய மூட்டைகளோடுகூடத் திரிந்துகொண்டிருந்தது. அவ்வொட்டகம் ஒரு தேசத்து அரசனுடையது. ஒருகால் அதுவும் பின்னும் பல ஒட்டகங்களுமாய் அநேகம் பொன் நாணய மூட்டைகளை எடுத்துக்கொண்டு ராஜாங்கத்துச் சேவகர்கள் பலரோடு ஒரு தேசத்திலிருந்து தேசாந்தரத்திற்குப் போய்க்கொண்டிருந்தன. நாள்தோறும் பொழுதுபோனபின்பு இராத்திரி எங்கேயாவது ஓரிடத்தில் தளமிறங்குவதும், பொழுதுவிடிந்தவுடன் எழுந்து புறப்பட்டுப் போவதுமாயிருக்கையில், ஒருநாள் காலையில் வேலைக்காரர்கள் தங்களுடன் இந்த ஒட்டகத்தை ஓட்டிக்கொண்டு போக மறந்துபோய்விட்டார்கள். ஒட்டகத்திற்கும் வீட்டுக்குப் போகவேண்டியவழி தெரியவில்லை. அதன்மேலே போட்டிருந்த மூட்டைகளும் அதிக உறுதியாய் இழுத்துக் கட்டப்பட்டிருந்தது; அவற்றை அது எந்தவிதமாய்க் கீழே தள்ளப்பார்த்தும் அது விழவில்லை. அதனால் அவ்வொட்டகம் முதுகில் அம்மூட்டையோடுகூடப் பன்னிரண்டுவருஷகாலம் அக்காட்டிலேயே சுற்றிச் சுழன்று அல்லாடிக்கொண்டிருந்தது. இப்படியிருக்க அவ்வொட்டகம் தன் விதியைத்தேடிப்போன இவ்வெளியமனிதன் அவ்வழி

யாக வரக்கண்டு நீர் எங்கேபோகிறீரென்று கேட்க, சோமநாதன், என் விதியைப் போய்க் கண்டு நான் இத்தனை தரித்திரனாயிருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்டுக்கொண்டுவரப்போகிறேன் என்றான். அதுகேட்டு ஒட்டகம், அப்படியாயின், நீர் எனக்கு ஒரு உதவிசெய்யவேண்டும்: பன்னிரண்டுவருஷங்களாய் நான் இப்பொன்மூட்டைகளைச் சுமந்துகொண்டு இக்காட்டிலேயே தடுமாறிக்கொண்டிருக்கிறேனே! இப்படி நான் அல்லாடத் துவக்கியது முதல் ஒருபோதும் எனக்குப் படுக்கவும் சாத்தியப்படவில்லை, இரையெடுக்கவும் சாத்தியப்படவில்லை; தண்ணீர் குடிக்கவும் சாத்தியப்படவில்லை. இப்படி வருந்தித் தவிப்பதற்கு நிமித்தம் இன்னதென்றுகேட்டுத் தெரிந்துக்கொண்டுவர வேண்டுகிறேன் என்றது. அப்படியே ஆகட்டுமென்று சொல்லிச் சோமநாதன் அக்காட்டு வழியே போனான்.

அங்கிருந்துபோகையில் நடுவழியே நதியொன்றிருந்தது. அந்நதியில் வாஸஞ்செய்துகொண்டிருந்த ஒரு முதலையானது அவ்வழியாகவந்த சோமநாதனைத் தன் முதுகின்மேல் ஏற்றிக்கொண்டுபோய் அக்கரைச் சேர்த்துப் பிறகு நீர் எங்கேபோகிறீரென்று கேட்க, அவன், நான் இவ்வளவு தரித்திரனாயிருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்கும்பொருட்டு என் விதியிருக்குமிடம் தேடிப்போகிறேன் என்றான். அதுகேட்டு முதலை, ஆனால் நானும் விதியை ஒரு விஷயம்கேட்கவேண்டும், அதாவது: பன்னிரண்டுவருஷகாலமாய் என் வயிற்றில் என்னவோ ஓயாது எரிந்துகொண்டிருக்கிறது; இது யாதுகாரணமோ என்மேல் சற்று தயவுசெய்து விசாரித்துவரவேண்டுகிறேன் என்று சொல்ல, சோமநாதன் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டு அப்புறம் சென்றான்.

அப்படியே அவன் அங்கிருந்து நெடுந்தூரம்போகையில் மார்க்கத்திலே ஒரு பெரும்புலி காலில் முள்தைத்து எழுந்திருக்கமாட்டாமல் விழுந்துகிடந்தது. அந்தப் புலி ஒரு சமயத்தில் இரைதேடிக்கொண்டுபோகையில், வழியிலே கண்வைக்காமல் எங்கேயோ பராக்காய்ப் பார்த்துக்கொண்டுபோக, நடுவழியிலிருந்த ஒரு முட்புதரிலே காலைவைத்துவிட்டது. அந்த முள்ளும் உறுதியாய்க் காலில் ஏறிப்போயிற்று. அப்போது சுவாமி அப்புலியைப்பார்த்து, நீ சற்றும் அவதானமில்லாத முழுமூடனாயிருப்பதால், பன்னிரண்டுவருஷகாலம் இப்படியே வருத்தமுற்று வீழ்ந்துகிடக்கவேண்டுமென்று சபித்ததனால் அந்தப் புலி இருந்தவிடம்விட்டு எழுந்திருக்கக்கூடாமல் அங்கேயே நெடுநாளாய் வீழ்ந்துகிடந்தது. இம்மனிதன் அவ்வழியாகப் போனதுகண்டு அந்தப் புலி, ஐயா நீர் எங்கேபோகிறீர் என்றுகேட்க, இவன், நான் இப்படி வறுமையால் வருந்துவதற்குக் காரணம் என்னவென்று கேட்கும்படி என் விதியிருக்கு

மிடம் தேடிக்கொண்டுபோகிறேன். என்னுடைய விதியானது நெடுந் தூரத்துக்கப்பால் பன்னிரண்டுவருஷம் பிரயாணம்செய்து போகத் தக்கதான ஓரிடத்தில் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கிறதென்றும், நான் ஒரு பெருந்தடியை எடுத்துக்கொண்டுபோய் அதனுல் பலங் கொண்டு அடித்து எழுப்பினுலல்லது அது எழுந்திராதென்றும் ஒரு ஞானி சொல்லக்கேட்டு நான் அப்படியே செய்யவேண்டும் என்று எண்ணிப்போகிறேன் என்றுசொல்ல, புலியானது, அப்படியாயின், நான் பலவருஷங்களாய்க் காலில் முள்தைத்து அந்த முள்ளோடு தொந்தரைப்பட்டுக்கொண்டிருக்கிறேன். அதை வாங்கும்படி எவ் வளவு முயன்றும் என்ருல் கூடவில்லை. இதன் காரணம் என்ன வென்று கேட்டுக்கொண்டு வரவேண்டும் என்ன, அம்மனிதன் அப் படியே கேட்டுக்கொண்டு வருகிறேனென்று சொல்லி அப்புறம்போ ஞன்.

அவ்வண்ணமே நெடுந்தூரம் நடந்து கடைசியில் அவன் சகல பிராணிகளுடைய விதிகளும் விழுந்துகிடக்கும் இடம்போய்ச் சேர்ந்தான். அங்கே விதிகளெல்லாம் கற்களாகக் கிடந்தன. அவற் றுள் அநேகம் நின்றவண்ணமாயும் அநேகம் தரையில் வீழ்ந்தவண் ணமாயும் கிடந்தன. அப்படி வீழ்ந்துகிடந்தவைகளுள் ஒன்றைக் கண்டு அவன், இதுதான் என்னுடைய விதியாயிருக்கவேண்டும்; இது இவ்விதமாய் உறக்கமுற்றிருப்பதனுலேதான் நான் இப்படிப் பட்ட வறுமையில் வருத்தப்படும்படி நேரிட்டிருக்கிறதென்று சொல்லிக் கையிலிருந்த ஒரு பெரும் பிரம்பினுல் அந்த விதியைத் தன் வலிமையெல்லாம்கொண்டு பலமுறை புடைக்கத் துவக்கினுன். எவ்வளவு அடித்தும் அது சலியாமல் அப்படியே வீழ்ந்துகிடந்தது. பொழுதுபோமளவும் அடித்தும் பயன்படாமற்போகவே அவன் கைசோர்ந்து அடிப்பதை நிறுத்திஞன். ஆயினும் கருணைக்கட லான கடவுள் அவனிடத்தில் அன்புகூர்ந்தவராகி உடனே அவ னுடைய விதியை விழித்துக்கொள்ளச்செய்தார். விழித்துக்கொண் டவுடனே அந்த விதியானது சோமநாதனை விழித்துப்பார்த்து, நீயேன் இந்நேரம் என்னை அடியடியென்றடித்தாய், நான் உனக்கு என்ன அபகாரம் பண்ணினேனென்று கேட்டது. அதற்குச் சோம நாதன், அபகாரமென்ரு கேட்கிருய்? மற்றென்ன அபகாரம்வேண் டும்? நீ இவ்வுலகசிந்தையேயில்லாமல் கும்பகர்ணனுக்குத் துணை யாய்த் தூங்குகிருய்; நான் படுகிற துன்பங்களுக்குக் கேள்விமுறை யில்லையே. என் வீட்டில் பெண்சாதிபிள்ளைகளெல்லாம் பட்டினி யால் வருந்திப் பிராணனைவிடத் துணிந்திருக்கிருர்கள். இப்படி என் விஷயத்தில் நீ கொடுமைசெய்வதற்குக் காரணம் என்னவென்று கேட்கும்பொருட்டு நான் உன்னை அடித்தெழுப்பினேன் என்று சொல்ல, விதியானது, ஓ, இதற்காகவா வந்தாய்? நல்லது, இனி உனக்கு ஒரு குறையுமில்லை, வேண்டிய செல்வமுண்டாகும்; வீட்

டுக்குப்போவென்று மறுமொழிகொடுத்தது. அதுகேட்டுச் சோமநாதன் மிகவும் திருப்தியடைந்தவனாகி, ஐயா, இன்னொருகேள்வி கேட்கவேண்டும். நான் வரும்போது வழியில் ஒரு ஒட்டகம் பன்னிரண்டுவருஷங்களாய் மிகப்பெரிதான பொன்நாணயமூட்டைகளைச் சுமந்துகொண்டு உண்டியுறக்கமில்லாமல் அல்லாடிக்கொண்டிருக்கக் கண்டேன்; அதற்குப் பரிகாரம் என்னவென்று கேட்டுக்கொண்டுவரும்படி அவ்வொட்டகம் என்னைப் பலதரம் வேண்டிக்கொண்டதென்று சொல்ல, அந்தத் தெய்வம், உடனே போய் நீ அம்மூட்டைகளை எடுத்துக்கொள், அவ்வளவோடு அந்த ஒட்டகத்தின் துன்பம் தொலைந்துபோம் என்றது.

'தங்கள் சித்தம் என்பாக்கியம்' என்று அதை ஒப்புக்கொண்டு சோமநாதன் பின்னும், நான் வந்தவழியில் ஒரு ஆற்றிலே பெரிய முதலையொன்று பலவருஷமாய் ஒருபோதும் அவியாத பெரிந்தீயினால் வயிற்றில் எரிப்புண்டு தவிக்கிறது. அதற்கு ஏதாவது பரிகாரமுண்டா இல்லையாவென்று கேட்டுக்கொண்டுவரும்படி அம்முதலை வருந்தி வேண்டிக்கொண்டதென்று சொல்ல, விதி, அதின் வயிற்றில் உன் தலையளவு பெரிதான வயிரக்கல் ஒன்றிருக்கிறது; முதலை அந்த ரத்தினத்தைக் கக்கிவிடுமாயின் அதற்குச் சுகமுண்டாகுமென்றது. அவ்வளவோடும் அவன் அந்தத் தெய்வத்தை விடவில்லை. ஒரு பெரும்புலி பன்னிரண்டுவருஷமாய்க் காலில் முள்தைத்து எழுந்திருக்கமாட்டாமல் வருத்தப்படுகிறது. எவ்வளவு முயன்றும் அந்த முள்ளை வாங்கக்கூடவில்லையாம்; ஏனது அப்படியாயிற்று என்று வினவினான். நீ போய் அந்த முள்ளைப் பல்லால்கடித்து இழுப்பாயானால் அது வெளியேவந்துவிடும் என்று விதிசொல்லிற்று. உடனே ஸ்வாமி அந்த விதியை முன்போலவே கல்லாக்கிவிட்டார்.

இவ்வாறு சோமநாதன் தனக்குவேண்டிய சங்கதிகளைக் கேட்டுக்கொண்டு அங்கிருந்து வீட்டுக்குப்போகப் புறப்பட்டான். புறப்பட்டுப் புலி விழுந்துகிடந்தவிடம்போய்ச் சேர்ந்தபோது புலி அவனைப்பார்த்து, ஸ்வாமி, என்னைப்பற்றி விதி என்னசொல்லிற்றென்றுகேட்க, சோமநாதன், உன் காலைநீட்டு; முள்ளை நான் வாங்கிவிடுகிறேன் என்றான். புலி காலைநீட்டிக் காட்டிற்று. அவ்வெளிய மனிதன் விதிசொல்லியபடியே அந்த முள்ளைப் பல்லால் கடித்து இழுத்தான்; அது வெளியே வந்துவிட்டது. ஆ, அது எவ்வளவு பெரியமுள்! முழநீளம் கைப் பருமனிருந்தது. அவ்வளவு பெரிதானமுள் காலில் ஏறிப்போயிற்றென்றால், அதனால் உண்டான வேதனை இப்படிப்பட்டதென்று நாம் எடுத்துரைக்கவேண்டுமோ? அம்மனிதன்செய்த மகோபகாரத்திற்காகப் புலிக்கு அவனிடத்தில் அதிக அபிமானமுண்டாயிற்று. அந்தப் புலி மிகுந்த ஐசுவரியமுடையது. புலிக்குப் பணமேதென்பீர்களோ? அது தனவான்களான பலபிரபுக்களையும் ராஜாக்களையும் பிடித்துத் தின்று அவர்களுடைய

செல்வமனைத்தையும் தன்வசமாக்கிக்கொண்டிருந்தது. தன்னுடைய தீராத்துயரத்தைத் தீர்த்தவனான சோமநாதனிடத்தில் அந்தப் புலி அதிக நன்றியுடையதாகி நீர் செய்த உபகாரத்திற்கு நான் ஏதாவது பிரதியுபகாரம் செய்ய விருப்பங்கொள்கிறேன். நான் கொடுக்கிற சொற்பப்பொருளைக் கைப்பற்றவேண்டும் என்று சொல்லி எழுந்து தன் குகைக்குப் போயிற்று. சோமநாதனும் அதைப் பின்தொடர்ந்து போனான். குகைக்குள் புகுந்தவுடனே புலி ஒரு பெரிய கோணிப்பையில் பல பொன்வெள்ளி நாணயங்களும் ரத்னாபரணங்களும் நிரம்பப் போட்டுக்கட்டிச் சோமநாதன் கையில் கொடுத்தது. அவன் அதைச் சந்தோஷமாய் வாங்கிக்கொண்டு புலியிடத்தில் நன்றியுடையவனாகி அதை வணங்கிச் செலவுபெற்றுக்கொண்டு அங்கிருந்து போகப் புறப்பட்டான்.

சிலநாள் பிரயாணம் செய்தபிறகு முன் முதலையைக்கண்ட ஆற்றங்கரைபோய்ச் சேர்ந்தான். அவ்விடத்தில் அவன் வரக்கண்டு முதலை முன்போலவே அவனை அவ்வாற்றின் அக்கரைகொண்டு சேர்த்து அவனுடைய யோகக்ஷேமங்களை விசாரித்துப் பிறகு என் இரைப்பையில் இப்படிப்பட்ட எரிச்சலுண்டாயிருப்பதற்குக் காரணம் இன்னதென்று கேட்டுக்கொண்டுவந்தீரோ என்று வினவிற்று. அதற்கு அம்மனிதன், அப்படியே விசாரித்தேன். பெரிய ரத்னமொன்று உன் வயிற்றுக்குள் இருப்பதனால் அப்படி எரிகிறது. நீ அதை உமிழ்ந்துவிடுவாயானால் அந்த எரிச்சல் அடங்கிப்போமென்றான். அதைக் கேட்டவுடனே முதலை தன் வயிற்றிலிருந்த மகாமணியைக் கக்கி உமிழ்ந்தது. அந்தக்ஷணமே அதின் வயிற்றிலிருந்த பேரெரிச்சல் அடங்கிப்போயிற்று. கீழே உமிழ்ந்த ரத்னத்தைப் பார்த்து முதலையானது, ஓ! ஒருநாள் நான் தண்ணீர் குடிக்கும்போது தெரியாமல் தண்ணீரோடுகூட இந்த மணியையும் விழுங்கிவிட்டேன்; இது மிகுந்த விலைபெற்ற மணி; நீர் செய்த உபகாரத்திற்காக இந்த மணியைக் கைக்கொள்ளவேண்டும் என்று சொல்லி, அதை அவனுக்கே கொடுத்தது. அப்படிப்பட்ட ரத்னம் இக்காலத்தில் அகப்படுவது மிகவும் அருமை. கோடி சூரியன் உதித்ததுபோல ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசித்த அந்த ரத்னத்தை வாங்கிக்கொண்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்து முதலையினிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு, ஒட்டகமொன்று பொன்மூட்டைகளைச் சுமந்து திரிந்துகொண்டிருந்த காட்டிற்குப் போனான். அக்காட்டில் அந்த ஒட்டகம் இன்னும் அப்படியேதான் அல்லாடிக்கொண்டிருந்தது. அது இவனைப் பார்த்து, நீர் போனகாரியம் என்னவாயிற்று? எனக்கு ஏதாவது ஒருவழி கேட்டுக்கொண்டு வந்தீராவென்று வினவ, சோமநாதன், கேட்டுக்கொண்டு வந்தேன். உன்னைப் பிடித்த துன்பம் இன்றோடு ஒழிந்துபோயிற்றென்று சொல்லி அதன் முதுகிலிருந்த மூட்டைகள் இரண்டையும் அவிழ்த்

துக் கீழே தள்ளிவிட்டான். நெடுநாளாய் எப்புறமும் திரும்ப வொட்டாமல் தன்னை வருத்திக்கொண்டிருந்த அந்த மூட்டைகள் கழிந்தவுடனே நிமிர்ந்து பெருமூச்சுவிட்டு, ஆ! நீர் எனக்கு என்ன மகோபகாரம் செய்தீர்! பலவருஷகாலமாக நிமிரவும் குனியவும் திரும்பவும் வணங்கவும் புசிக்கவும் படுக்கவும் ஒன்றும் கூடாமல் பெருந்துன்பம் அனுபவித்துவந்தேன். இப்போது என் தேக முழுதும் எனக்குச் சுவாதீனமாகிவிட்டது. மேலும் எனக்கு இப்போது ஒருபெரிய மலையின்கீழ் அகப்பட்டு விடுபட்டதுபோலிருக்கிறதென்றுசொல்லி மனமுவந்து சோமநாதனிடத்தில் மிகுந்த பக்ஷமுடையதாகி, இப்படி என்னுயிரை அளித்த உமக்கு நான் என்ன உபகாரம்செய்யப்போகிறேன். இவ்விரண்டு பொன்மூட்டைகளும் உம்முடையவையாகவே இருக்கட்டும். இப்போது நான் இங்கே செய்யவேண்டிய வேலை ஒன்றுமில்லை; உம்மையும் உம்முடைய சாமான்களையும் ஏற்றிக்கொண்டுபோய் உம்முடைய வீட்டில் சேர்த்துவிட்டு வருகிறேனென்று சொல்ல, சோமநாதன், நமக்கு நல்லகாலம் இன்றைக்கே வந்துவிட்டதென்று மனங்களித்தவனாகி அவ்வொட்டகத்தின்மேல் தன் மூட்டைகளையெல்லாம் ஏற்றித் தானும் ஏறிக்கொண்டு வழிநடக்கும் வருத்தமுமின்றிச் சுகமாய் வீடுபோய்ச் சேர்ந்தான். அவன் அதன்மேலிருந்த மூட்டைகளையெல்லாம் இறக்கி வீட்டிலே வைத்துக்கொண்டபிறகு அவ்வொட்டகம் சோமநாதனை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, தன்மேலிருந்த சுமை நீங்கினதற்காக மிகுந்த சந்தோஷமடைந்து காட்டுக்கு ஓடிப்போயிற்று.

சோமநாதன் கொண்டுவந்த அளவற்ற ஐசுவரியங்களைப் பார்த்தபோது அவனுடைய பெண்சாதி பிள்ளைகளுக்கு உண்டான ஆநந்தத்தை அளவிடக்கூடுமோ? எல்லோரும் மிகுந்த மகிழ்ச்சிகொண்டவர்களாகி ஆ! இதென்ன, அதென்ன, இப்படிப்பட்ட விலையில்லாப் பொருள்கள் உங்களுக்கு எங்கேகிடைத்தன என்று பல கேள்விகேட்க, அவன் தன் கதைகளையெல்லாம் ஆதியோடந்தமாய் எடுத்துரைத்தான். அந்தக் கதைகளைக் கேட்பதிலிருந்த ஆவலிலும் அளவற்ற ஐசுவரியத்தைக் கண்ட களிப்பிலும் அவர்களுக்குப் பசிகூடச் சிறிதும் தோன்றவேயில்லை. அவ்விதமாக நெடுநேரம் பேசி மகிழ்ந்துகொண்டிருந்தார்கள். அப்புறம் அவன் அந்தப் பொருள்களைக்கொண்டு வேண்டிய காணிபூமிகளும், தோட்டம் துரவுகளும் ஆடையாபரணங்களும் வாங்கிக்கொண்டு வேலையாட்கள் பலபேர் வந்து பாதப்பணிவிடைசெய்ய மேன்மைபெற்று வாழ்ந்திருந்தான்.

சோற்றுக்கு அழுதுகொண்டிருந்த சோமநாதனுக்கு அளவற்ற செல்வம் உண்டானதைக் கேள்விப்பட்டு, ஏறக்குறைய வறுமையில் அவனையொத்தவனான அவ்வூரான் ஒருவன் பொறாமைகொண்டவனாகி, அவனிடம் வந்து உனக்கு இத்தனைபொருள் எங்கே கிடைத்

நதென்று வினவ, சோமநாதன், நெடுந்தூரத்துக்கு அப்பால் ஒரு பெரிய நதி ஓடுகின்றது. அவ்வாற்று மடுவிலே நான் ஒருகுடம் தண்ணீர் எடுத்தேன்; எடுக்க எடுக்க அந்தத் தண்ணீரெல்லாம் பொன்னுயிருந்தது. அதைத்தான் நான் எடுத்துக்கொண்டு வந்தேன் என்முன். அது கேட்டவுடனே புறப்பட்டு அவன் அவ்வாற்றங்கரைபோய்ச் சேர்ந்து அதிலுள்ள தண்ணீரையெல்லாம் மொண்டுமொண்டு வெளியே இறைத்தான். எந்நேரம் எடுத்திறைத்தும் அணுவளவு பொன்கூட அவனுக்கு அகப்படவில்லை. வரவரத் தண்ணீர் வடிந்து வருவது கண்டு அம்மடுவிலிருந்த ஒரு முதலைராஜன் அம்மனிதனைப் பார்த்து, ஐயோ! நீரேன் இப்படி இம்மடுத்தண்ணீரையெல்லாம் இறைத்துவிடுகிறீர்; வேண்டாம் வேண்டாம்; இம்மடுவிலுள்ள மீன்முதலிய நீர்வாழ் ஜந்துக்கள் யாவும் அநியாயமாய் இறந்துபோகும் என்று சொல்ல, அவன், நான் இவ்விடத்தில் பொருள்சம்பாதிக்கவந்தேன். இங்கு ஒன்றும் அகப்படாமையால் இம்மடுவின் அடிப்புறத்திலாவது கொஞ்சம் அகப்படுமோவென்று தண்ணீரையெல்லாம் இறைத்துக்கொண்டிருக்கிறேன் என்முன். அப்படியாயின் உமக்கு நான் கொஞ்சம் பொருள் தருகிறேன்; தண்ணீரிறைப்பதை நிறுத்துமென்று முதலை சொல்லிற்று. அப்படியே அவன் தண்ணீர் இறைப்பதை நிறுத்தினுன். நிறுத்தினவுடனே பெரிய அலையொன்று கரைமேலடித்துப் பொன்களை வாரிச் சொரிந்தது. அதைப் பார்த்து அம்மனிதன் சந்தோஷமடைந்து அவற்றையெல்லாம் வாரியெடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போனுன். ஆயினும் அவனுடைய ஆசை அவ்வளவோடு அடங்கவில்லை. மறுநாள் காலையில் எழுந்து மறுபடியும் அவன் அம்மடுக்கரைக்கு வந்து இராப்பகல் ஓயாமல் அதன் தண்ணீரையெல்லாம் இறைக்க ஆரம்பித்தான். அதைப் பார்த்து அங்கிருந்த முதலை மிகக் கோபங்கொண்டு இப்படித் தண்ணீரையெல்லாம் இறைத்துவிட்டால் என்னுடைய ஜந்துக்களெல்லாம் அநியாயமாய் இறந்துபோம்; ஒருதரம் நாம் இம்மனிதனுக்கு வேண்டிய பொருள் கொடுத்தோம்; திருப்தியில்லாமல் அவன் மறுபடியும் வந்து தொந்தரைசெய்கிருன். இனி ஒன்றும் அவனுக்குக் கொடுப்பதில்லையென்று தீர்மானங்கொண்டு ஒரே தாவாய்த் தாவி அம்மனிதன்மேற் பாய்ந்து அவனைப் பிடித்து விழுங்கிவிட்டது. நான்குநாள்வரைக்கும் அம்மனிதன் முதலைவயிற்றில் உயிரோடேயே வசித்துக்கொண்டிருந்தான். நான்குதினத்திற்குப்பிறகு முதலை தன் வயிற்றிலிருந்த மனிதனைப்பார்த்து, உனக்கு இந்த தண்டனை போதுமா? இச்செய்தியை ஒருவரோடும் சொல்லாமல் நீ ஓடிப்போவதானுல் உன்னை இப்போது வெளியே விட்டுவிடுகிறேன்; இச்செய்தியை நீ எப்பொழுதாவது வெளியிட்டால் உடனே இறந்துபோவாயென்று சொல்ல, அப்படியே ஆகட்டுமென்று அவன் அதற்கு உடன்படவே, முதலை அவனைக் கக்கியுமிழ்

ந்தது. இப்போது அவன் பிழைத்தது புனர்ஜநநமல்லவா? முதலை வயிற்றினின்றும் விடுபட்டவுடனே அவன் அதிக சந்தோஷமடைந்து வீட்டுக்கோடிப்போனுன். ஆயினும் போம்போது சும்மாப் போகவில்லை. வழியில் எதிரே வந்தவர்களோடு தனக்கு நேர்ந்த வாலாறுகளையெல்லாம் சொன்னதுமல்லாமல் வீட்டுக்குப்போய்த் தன் பெண்சாதி பிள்ளைகளோடும் தான் பட்ட பாடுகளை ஒன்றுகூட விடாமல் சொல்லிமுடித்தான். முடித்தவுடனே பித்தம் பிடித்துப் பேச வாயடைத்து வாயினுல் உதிரம்கக்கிக் கடைசியில் இறந்துபோனுன்.

எவரும் ஊக்கத்தைக் கைவிடாமல் உழைத்துப் பொருள்தேட வேண்டியது அவசியமேயாயினும், எப்போதும் திருப்தியில்லாமல் வீண்பேராசைகொள்வது பெரும்பிழையென்பது இதனுல் தெளிவாகின்றது.

"உலையா முயற்சி களைகணு வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே...." எனவும்,

அதிக ஆசை அதிக நஷ்டமெனவும் மேலோர் உரையுமிருக்கின்றனவல்லவா?

மேன்மக்கள் என்பவர் யார்?

மேன்மக்களென்று சொல்லப்பட்டவர் உத்தமமான நிதர்சனங்களை மாதிரியாகக்கொண்டு உருவமைந்த பிரகிருதியுள்ளவரேயாம். மேன்மக்கள் என்பது பழமைதொட்டு வழங்கிவரும் பெருமைப் பெயராம். இப்பெயரானது எத்திறத்தோர்க்கும் ஒரு உயர்ந்த பதவியாகவும், அதிகாரமாகவும் கொண்டாடப்படும். ஸ்கொத்திலாந்துதேசத்துக் குலமக்கள் சேர்ந்த பட்டாளத்தை நோக்கிப் பிரான்ஸ்தேசத்து தளபதி ஒருவர் "சீரியர் கெட்டாலும் சீரியர் சீரியரே என்றபடி, மேன்மக்கள் எப்பொழுதும் மேன்மக்களே; ஆபத்தும் அபாயமும் மேலிடும்பொழுதெல்லாம் அவன் குலமகனென்று அவன் செய்கையால் நிதரிசனப்படும்" என மொழிந்தார். இப்பெருந்தன்மை ஒன்று உண்டானுல், அதுவே அவர்க்கு ஒரு மேம்பாடாயிருக்கும். "கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்களே" என்ற மேலோருரையும் இருக்கின்றதல்லவா? உதாரமதியுள்ளோர் எவரெவரும் அதற்குத் தற்செயலாய்ப் பணிந்து வணக்கம் செலுத்துவார். பட்டம் சூடிப் பதவி உயர்ந்தவர்களுக்குத் தலைவணங்காதவர்களும் அத்தன்மையான சாதுக்களை வணங்கி உபசரிப்பார்கள். சாதுக்களுக்கு மாற்று உயர்வது நாகரிகத்திஞலும் விநயத்தாலுமல்ல, அவர்கள் நன்மையால்; அவர்கள் உடைமை உற்பத்திகளாலல்ல,

அவர்களுடைய குணங்களால். "நேர்மையாக நடந்து, செய்வதை நியாயப்படிசெய்து, உள்ளத்தில் உள்ளதை உள்ளபடி பேசுகிற வன்" எனச் சங்கீதாசிரியர் ஒருவர் சாதுலக்ஷணம் கூறுகிறார்.

சாதுக்கள் தம் பெருமையைத் தாம் அறியும் திறமையுடமைக் காகவே மேலாகக் கொண்டாடப்படுகின்றனர். அவர்கள் தமது குணத்தை மதிப்பது அது மேலுக்குத் தோன்றுமளவுமாத்திரமே யல்ல; தம் மனச்சாட்சிக்கு மெய்ப்பட உள்ளதென்று தம் மனதுக் குத் தோன்றுமளவேயாம். அவர்களுக்குத் தன்மானமும் உண்டு, அம்முறையே பிறர்மானமும் உண்டு. காருணியம் அவர்கள் கண் ணுக்குத் திவ்விய குணமாயிருக்கும்; அதினின்று உற்பத்தியாவன:- விநயம், பொறை, தயை, அன்பு இவைகளாம். எட்வார்ட் பித்ஸ் ஜிரல்ட் பிரபு இந்தியரோடு கனடாவில் பிரயாணம்போகும்பொ ழுது, இந்தியர்களுடைய தலைவன் ஒருவன் சுமைதடை எதுமின் றிச் சுகமே வழிநடந்துபோக, அந்தப் பாவியின் மனைவி அவனு டைய வஸ்திர பூஷணாதிகள் வைத்துக்கட்டிய பெருஞ்சுமையை எடுத்துக்கொண்டு வருந்தித் தளர்நடையாய்ச் செல்வது கண்டு திகைத்து மனதுருகி, எட்வார்ட் பிரபு அவளை இளைப்பாறச் சொல் லித் தாம் அச்சுமையை வாங்கித் தோள்மேல் எடுத்துக்கொண்டு போனதாக ஒரு கதை சொல்வதுண்டு. பிரான்சுதேசத்தார் உண் மையான சாதுக்களுக்குப் பிறவிக்குணமாயுள்ளது இரக்கமென்று சொல்வார்களே, அதற்கு இது சிறந்த திர்ஷ்டாந்தமாம்.

மேன்மக்கள் பரிதானம் வாங்க உடன்படார்.

உண்மையான குலமகனுக்குப் பெருந்தன்மை பெறவேண்டு மென்ற நுட்பபுத்தியுண்டு. அவன் எளிய செய்கைகளைக் கண்டிப் பாய்த் தவிர்த்துவிடுவான்; சொல்லிலும் செயலிலும் அவன் கொள்கிற நோக்கம் கண்ணியமானது. அவன் நழுவலான பேச் சுப் பேசுகிறதில்லை, நா புரளுகிறதில்லை, மடிப்புச் செய்கிறதில்லை; பெருந்தன்மையும் உண்மையும் யதார்த்தமும் நேர்மையுமுள்ள வனுயிருப்பான். செய்வதை நேர்மையாய்ச் செய்வதே அவனு டைய கொள்கையாம். அவன் ஆம் என்று சொல்லும்பொழுது அச்சொல்லே ஒரு பிரமாணம் ஆகின்றது. தகும் சமயத்தில் அவன் அல்ல எனும் பராக்கிரமச்சொல்லை அச்சமற்றுச் சொல்வான். சாது பரிதானம்வாங்க உடன்படான்; புல்லறிவுடையோரும் குணங் கெட்டவர்களுமாத்திரமே வேண்டியவர்களுக்குத் தம்மை விற்றுப் போடுவார்கள். நேர்மையுடையோனுகிய

ஜோனஸ் ஹான்வே

ராணுவச் சேவகருக்குச் சாமக்கிரி சேகரித்துக்கொடுக்கும் வகுப் பில் தலைமை உத்தியோகம் நிர்வகித்துவருகையில், ஒப்பந்தக்காரன்

அவருக்கு வெகுமதி கொடுக்கப்பார்த்த எவ்வகைப் பொருளையும் அவர் ஏற்க இணங்கவில்லை. செய்கடனை நெறிதவறிச் செய்யாவண்ணம் அவர் இவ்வாறு மறுத்தார். இவ்வகைச் சிறந்த ஒழுக்கத்தை

உவெலிங்தன் டியூக் பட்டவர்த்தனர்

சரித்திரத்திலும் ஓரிடத்தில் காணலாம். இவ்விந்தியாவில் அஸ்ஸே யுத்தம் முடிந்தபிறகு ஒருநாள் காலையில் ஹைதிராபாத் நிஜாமின் பிரதம மந்திரியானவர், மஹாராஷ்டிர அரசருக்கும் நிஜாமிற்கும் ஏற்பட்ட சமாதான உடம்படிக்கையில் தம் அதிபதிக்குக் குறித்திருக்கும் பிரதேசமும் சுதந்தரங்களும் எவையெனக் கேட்டு விவரம் அறியும்படி பட்டவர்த்தனரைக் காணப்போயிருந்தார். இந்த விவரத்தை அறிக்கைசெய்யும் உபகாரத்திற்காக மந்திரி தளபதிக்குப் பத்துலக்ஷம் ரூபாய்க்குமிஞ்ச வெகுமானந்தருவேன் என்று சொல்ல, சேனாபதி சிறிதுநொடிப்பொழுது அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்து, "ஐயா, நீர் எப்படிப்பட்ட ரகசியத்தையும் வெளியிடாத உத்தமரெனத் தோன்றுகிறதே?" என, மந்திரி, "ஆம், அதற்கு ஐயமில்லை" என்றார். அச்சொற்கேட்டு அங்கிலேய ராணுவத்தலைவர், "ஆயின், நானும் அப்படித்தான்" எனப் புன்னகையோடு உத்தரம் சொல்லிச் சிரக்கம்பஞ்செய்து மந்திரிக்கு விடைகொடுத்தார். உவெலிங்தன் இந்தியாவில் எடுத்த காரியங்கள் தவறாது எப்பொழுதும் கைகூடின. இந்த விதத்தில் திரவியம் சம்பாதிக்க அவருக்கு மெத்தவும் திறமை உண்டு; உண்டெனினும் அவருக்குச் சம்பாத்தியம் ஒருதுட்டும் இல்லை. அவர் மனம்வைத்தால் எவ்வளவோ சம்பாதித்திருக்கலாம். தம்மைப்போன்றவர்களுக்குள் அவர் தரித்திரராகவே சீமைக்குத் திரும்பிப்போயினார். இந்த இயற்கை அவருக்கு மிகவுங் கௌரவமாக முடிந்தது. அவருடைய பந்துவான

உவெல்ஸ்லி மார்க்விஸ்

பிரபுவும் இவ்வகைத் திறமையாலும் பெருந்தன்மையாலும் சிறப்புப் பெற்றிருக்கிறார். அவர் மைசூர்ச் சண்டையில் வெற்றிசிறந்தபொழுது ஒரு சமயத்தில், ஈஸ்திந்திய கம்பெனியின் அதிகாரசபையார் அவருக்குப் பத்துலக்ஷம் ரூபாய் வெகுமானம் கொடுக்கப்போக, அவர் தமக்கு வேண்டுவதில்லையென்று ஒரு நிலையாய் நின்றார். அப்பொழுது அவர் சொன்னதாவது:—"என் ஒழுக்கத்தின் சுதந்தரத்தையும் உத்தியோக பதவிக்குரிய மேம்பாட்டையும் சுட்டி இப்பொழுது ஏதும் சொல்வது ஆவசியகமல்ல. எனக்கு ஏற்காத இந்த உபகாரத்தை வேண்டாமெனமறுக்க என்னைத் தூண்டும்முகாந்தரங்கள் முக்கியமான இவைகளன்றி வேறும் உண்டு. நமது சேனாவகுப்பிலன்றி மற்றொன்றிலும் எனக்குச் சிந்தனையில்லை. அந்தப் போர்வீரருடைய பங்கைக் குறைவிப்பது என் மனதிற்கு மிகுந்த துன்பமாகும்"

என்றார். வெகுமானம் வேண்டாமென்று மறுக்க அந்த மார்க்விஸ் செய்த நிர்ணயம் மாறாதிருந்தது. இந்தியாவில் சஞ்சரித்தகாலத்தில்

ஸ்ரீ சார்லஸ் நேப்பியர்

என்பவரிடத்திலும் சுயநன்மை மறுத்தல் எனும் இம்மேலான குணம் விளங்கியது. புல்லராகிய மன்னர்கள் அவர் பாதத்தண்டை வைக்க எத்தனித்த விலையேறப்பெற்ற காணிக்கை அனைத்தையும் அவர் தமக்கு வேண்டுவதில்லை என்று தள்ளிவிட்டார். "நான் சிந்து தேசத்திற்கு வந்தபின் எனக்கு மனமிருந்தால் மூன்றுலக்ஷம் ரூபாய் வாங்க இடமிருந்தது நிசம். ஆனால் கழுவ என் கையில் இன்னம் அழுக்கேறவில்லை. மீனியிலும் ஹைதராபாத்திலும் நடந்த இரண்டு யுத்தங்களிலும் நான் தரித்திருந்த எங்கள் அன்பான தந்தையினுடைய கத்தி கறைப்படாதிருக்கின்றது" என அவர் மொழிந்தது உள்ளதுதான்.

செல்வம் அந்தஸ்து இவைகள் மேன்மக்களுக்குரிய சகஜகுணங்களோடு விடாமல் சம்பந்தப்பட்டிருக்கின்றன வென்பதில்லை; ஏழை மனிதனும் உள்ளத்திலும், அன்றன்று ஒழுகும் ஒழுக்கத்திலும் உத்தமகுணம் உள்ளவனாயிருப்பினும் இருப்பான். சுத்த சாதுவிற்குரிய லக்ஷணங்களாகிய நேர்மை, உண்மை, நிதானம், விநயம், பொறுமை, தீரம், தன்மானம், தற்சகாயம் இவை அனைத்தும் அவனிடத்தில் ஒன்றுசேர அமையினும் அமையும். மனச்செல்வ மிகுந்துள்ள வறிஞன் மனதின்கண் வறிஞனான செல்வனைக்காட்டிலும் எவ்விதத்திலும் மேலானவனேயாம். ஸெண்டு பௌல் என்பவருடைய வாய்மொழியை அனுசரித்துச் சொல்லில், முதல்வனுக்கு ஒன்றும் இல்லாதிருந்தும், அனைத்தும் உண்டு, மற்றவனுக்கோ எல்லாம் இருந்தும் ஒன்றும் இல்லை. அவனுக்கு எந்த நல்வரத்திலும் ஆசை உண்டு, அச்சம் இல்லை; இவனுக்கு அவ்வாசை இல்லை, இவன் எதற்கும் அஞ்சுவான். தாழ்ந்த புத்தியுடையோரே வறிஞரெனப்படுவார். உள்ளதெல்லாம் இழந்தும், தீரமும் மனமகிழ்ச்சியும் ஊக்கமும் தருமமும் தன்மானமும் கைவிடாதிருப்பவன் எப்போதும் செல்வனே. அவன் எப்படிப்பட்ட சங்கடங்கள் நேர்ந்தகாலத்தும் கவலைகொண்டு மனஞ்சோராதவனாகி, மேன்மக்கள்போலவே கம்பீரமாக நடந்துவருவான்.

கனம்பெற்ற குடியானவன்.

தீரமும் சாத்விகமுமுள்ளவனை இழிவிற்கிழிவான ஆடை உடுத்திருக்கவும் ஒவ்வொரு சமயத்தில் காண்போம். பூர்வகாலத்ததாயினும் திவ்வியமான திர்ஷ்டாந்தம் ஒன்று இதற்கு இங்கெடுத்துச் சொல்வோம். முன்னொரு காலத்தில் அடிஜ்நதி அசதியில் கனாபுரண்டு பெருகியபொழுது, விரோனா வாரதி நடுக்கண் கட்டட உறுப்பு

ஒன்றுதவிர மற்றெல்லாம் பிரவாகத்தில் உடைந்து எடுபட்டுப்போயின. அந்த நடுக்கண் கட்டடத்தில் ஒருவீடு உண்டு. வாரதி அஸ்திவாரம் நெகிழ்ந்து நிலைபறுவதுகண்டு அவ்வீட்டார் பலகணியில் நின்று ஆபத்திற்கு உதவும்படி வேண்டிக்கொண்டனர். அப்போது கிட்ட நின்ற ஸ்பொல்விரினி கௌன்ட் பிரபுவானவர் "நிர்ப்பாக்கியரான இவர்களை அச்சமற்று இவ்வாபத்தினின்றும் எவன் ஒருவன் தப்புவிக்கிறானோ அவனுக்கு ப்பிரெஞ்சு லூவிஸ் நாணயம் நூறு வெகுமானம் கொடுப்பேன்" என வாக்குறுதிசெய்தார். அது கேட்டு அந்தக் கூட்டத்திலிருந்த வாலிபனாகிய பயிர்க்குடி ஒருவன் முன்னிட்டுவந்து சிற்றோடம் ஒன்று பிடித்து ஆற்றில் தள்ளி, அதில் ஏறிச் செலுத்திக்கொண்டு வாரதிக்கண் கட்டடத்திற் சேர்ந்து, அவ்வீட்டார் அனைவரையும் ஓடத்தில் ஏற்றிக்கொண்டு திரும்பி க்ஷேமமாய்க் கரையேறினான். அதன்பின், மேற்படி கௌன்ட் பிரபு, "தீரமுள்ள இளஞ்சிங்கமே, இதோ உன் பணத்தை ஏற்றுக்கொள்" என்றுசொல்ல, வாலிபன் "வேண்டாம், நான் என் பிராணனை விக்கிரயம் செய்வதில்லை, அந்தப் பணத்தை இவ்வேழைக் குடும்பத்தார்க்குக் கொடுங்கள். அது இவர்களுக்கு மிகவும் உதவியாகும்" என மறுமொழி பகர்ந்தான். அவன் பயிர்க்குடியின் ஆடை உடுத்திருந்தும், மேன்மக்கட்குரிய மெய்யான குணம் அவனிடத்தில் குடிகொண்டு மேற்சொல்லிய வார்த்தைகளைப் பேசியது.

டீல் ஓடக்காரர் சிலர்

சிறிதுகாலத்திற்குமுன் (1866–ஆ ஜனவரிமீ 11உ) மணற்களம் தட்டிப்பொறுத்த நிலக்கரிக்கலம் ஒன்றின் கடலோடிகளைத் தப்புவிக்கும் பொருட்டுச் செய்த வீரமும் மேற்குறித்த திர்ஷ்டாந்தத்திற் குறைந்ததன்று. வடகீழ்த்திசையினின்று சடிதியில் புயலடித்து நங்கூரம்போட்டுநின்ற மரக்கலங்கள் சில நங்கூரவடம் அறுந்து ஓடிவிட்டன. ஒருகலம் கரைக்கு வெகுதொலையில் தரைதட்டி நிற்க, கடல் அலைபுரண்டு அதை மூடிக்கொள்ள எத்தனித்தது. கலம் தப்பித்துக்கொள்ளுமென்றெண்ணச் சிறிதும் இடமில்லாதிருந்தது; காற்று அத்தனை உக்கிரமாயடித்துக் கடலலைகள் பிரசண்டகதியாய்ப் புரண்டகரையில் நின்று இந்த விபத்தைக் கண்ட சிற்றோடக்காரர் உயிரைப் பொருள்செய்யாமல் கடலில் இறங்கி, மரக்கலத்தையாவது கடலோடிகளையாவது தப்புவிக்கும்படி அவர்களுக்கு ஆசைபுகட்டுவது ஒன்றும் இல்லை. பிரதியுபகாரம் ஒரு துட்டாவது கிடைக்குமென்று எதிர்நோக்க இடம் இல்லாதிருந்தது. ஆனால், பிராணகண்டம் நெருங்கிய அந்த நிமிஷத்தில் டீல் சிற்றோடக்காரருக்கு அஞ்சாத்தீரம் இல்லாதொழிந்துபோகவில்லை. கப்பல் தரைதட்டிப் பொறுக்கவும் கரைநெடுகக் கூடிநின்ற பலபேர்களுள் ஒருவனான ஸைமன் பிரிச்சார்ட் என்பவன் மேலங்கியைக்

களைந்து வீசிவிட்டு "என்னுடன் வந்து இந்தக் கடலோடிகளை இரட்சிக்க எத்தனிப்பதற்கு இஷ்டமுள்ளவர் யாவர்" என்று கூவிக் கேட்க, அந்தக்ஷணமே "நான் வருகிறேன், நான் வருகிறேன்" என்று இருபதுபெயர் முற்பட்டு ஓடிவந்தனர். ஆனால் அத்தனை பெயர் வேண்டுவதில்லை; ஆகக்கூடி ஏழு பெயர் வேண்டும். அவர்கள் தட்டையோடம் ஒன்றை விரைவில் அலையதிர்கடலில் இறக்கி அதிற்பாய்ந்து, கரையில் பார்த்துக்கொண்டு நின்றோர் எக்களித்து ஆர்ப்பரிக்க, பேரலையை ஊடறுத்து வேகமாய்ச் சென்றார்கள். கொந்தளிக்கும் அந்தக் கடலில் ஓடம் தப்பி மீண்டுவந்தது அற்புதமே; ஆனாலும் வீரசூராகிய அவர்களுடைய புயபலத்தால் ஓடம் வேகமாய்ப் பறந்து சில நிமிஷத்திற்குள் களம்தட்டிய கலத்தண்டை சேர்ந்தது. சிற்றோடம் கரையினின்று புறப்பட்டுக் கால்மணிநேரம் ஆகுமுன், நிலக்கரிக்கலத்தைச் சேர்ந்த கடலோடிகள் ஆறுபெயரும் உவால்மர் கடற்கரையில் க்ஷேமமாய் ஏற்றிக்கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டனர். டீல் ஓடக்காரர் எப்பொழுதும் வீரதீரரென்று உலகறியப் பெற்றவர்கள்தாம். ஆனாலும் இந்தச் சமயத்தில் அவர்களுக்கு இருந்த சலியாத் தீரத்தையும், தம் உயிரையும் பெரிதாகக் கொள்ளாத வீரத்தையும் விளக்கிய திர்ஷ்டாந்தத்திலும் மிஞ்சின திர்ஷ்டாந்தம் எடுத்துக்காட்டுவது அசாத்தியமேயாம்.

மெஸ். தர்ன்புல் ஔஸ்திரியாவைப்பற்றி எழுதிய கிரந்தத்தில், அங்குள்ள ராஜபிரபுக்களின் குணநலத்தாலேயே அத்தேச துரைத்தனத்தார்மீது பிரஜைகளுக்குப் பிடிமானம் உண்டான வகையை விளக்கும் திர்ஷ்டாந்தமாக, காலஞ்சென்ற

பிரான்ஸிஸ் சக்கரவர்த்தி

யைக்குறித்து ஒரு கதை சொல்லியிருக்கிறார். அதாவது:—வியன்னாபுரியில் வாந்திபேதி உக்கிரமாய்க் குடிகளை வருத்துங்காலத்தில் ஒருநாள் சக்கரவர்த்தி சேனாதிபதி ஒருவருடன் நகரத்திலும் அதன் பேட்டைகளிலும் வீதிவிலாசம் வரும்பொழுது, அழுவார் ஒருவருமின்றிப் பிரேதம் ஒன்று வண்டியில்வைத்து இழுத்துக்கொண்டுபோகப்பட்டது. அந்தப் புதுமையான காட்சியைக்கண்டு சக்கரவர்த்தி இதன் நிமித்தம் யாதென்று விசாரித்தார். இறந்தவன் ஏழை; அவன் விஷபேதி கண்டிறந்தான், பிரேதத்தோடு மசானத்திற்குப்போவது பிராணபாயமென்று பந்துஜனங்கள் போகத் துணியவில்லையென்று சொன்னார்கள். அதுகேட்டுப் பிரான்ஸிஸ் சக்கரவர்த்தி "அப்படியாயின் அவர்களுக்குப் பதில் நாம் போவோம்; ஏழையாயினும் நமது பிரஜைகளில் எவனும் தகுந்த மரியாதையோடல்லாமல் மயானத்துக்குச் செல்வது தகுதியன்று" எனமொழிந்து தொலையிலுள்ள மசானத்திற்குத் தான் பிரேதத்தின் பின்னேபோய்

வெறுந்தலையாய் நின்று நடக்கவேண்டிய கருமங்கள் அனைத்தும் வணக்கமாய்ச் செய்வித்தார் என்று சொல்லுகிறார்.

மேன்மக்களுடைய லக்ஷணங்களை விளக்கும் இத்திர்ஷ்டாந்தம் மிகச் சிறந்ததேயாயினும், இதைப்போலச் சிறந்ததான மற்றொன்றை இதற்கு இணையாக எடுத்துக்காட்டுவோம். அது பாரீஸ் நகரத்தில்

அங்கிலேயராணுவ மரக்கலச் சேவகர்

இருவரைக்குறித்துச் சில வருஷத்திற்குமுன் காலைப்பத்திரிகை ஒன்றில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கின்றது. என்னவெனில், "பிரேதப்பெட்டியை ஏற்றிக்கொண்டு ஒருவண்டி ஒருநாள் மசானத்திற்குப்போக வழிகொண்டு கிலிச்சி ரூ என்னுங் குன்றின்மேல் ஏறியது. அதன்பின்னே ஒரு பிராணியும் போகவில்லை. இறந்தவன் நாய் வளர்த்திருப்பானாகில் அதுவாவது போயிருக்கும்; அந்த நாயும் போகவில்லை. அன்று மழைநாள்; மிகவும் இருண்டு பயங்கரமாயிருந்தது. வழிச்செல்வோர் அந்தப் பிரேதத்தைக் கண்டு வழக்கப்படி தலைப்பாகையை எடுத்து மரியாதைசெய்துவிட்டுப் போயினரேயொழிய, ஒருவரும் அதைப் பின்தொடரவில்லை. கடைசியில் ஸ்பானியாவிற்குப்போகும் மார்க்கத்தில் பாரீஸில் இறங்கின அங்கிலேயப் போர்க்கப்பற்சேவகர் இருவர் வழியில் எதிர்ப்பட்டார்கள். அவர்களுடைய கம்பளச் சட்டைக்குள்ளிருந்து உண்மையான இரக்கமொன்று எழுந்து பேசியது. ஒருவன் மற்றவனைப் பார்த்து, ஐயோ ஆருமற்ற பாவி! இவனைத் தொடர்வார் எவருமில்லை; நாமிருவரும் போவோம்! என்று சொல்ல, இரண்டு பெயருந் தலைப்பாகையை எடுத்து வெறுந்தலையாய் அந்த அநாதப் பிரேதத்தின் பின்னே மசானத்திற்குச் சென்றார்கள்."

எல்லாவற்றிலும் மேலாக சாது சத்தியவந்தனாய் இருப்பான். சத்தியமானது உயிர்வாழ்க்கைக்கு முக்கியமானதென்றும், மனிதர் வியாபாரங்களில் நேர்மைக்கு உயிர்நிலையென்றும் அவன் அறிகிறான். மேன்மக்களுக்குச் சத்தியத்தினாலேயே காரியசித்தி உண்டாகின்றதென செஸ்தர்பீல்ட் பிரபு கூறினார். உவெலிங்தன் டியூக் பட்டவர்த்தனர் தீபகற்பத்தில் கெல்லர்மன் தளபதிக்கு எதிரியானபொழுது வாக்குப் பிசகிய கைதிகளைப்பற்றிய விஷயத்தில் தளபதிக்குக் கடிதமெழுதி, அங்கிலேய ராணுவ உத்தியோகஸ்தர் முக்கியமாய்ப் பாராட்டுவது தைரியம்; இரண்டாவது சத்தியமென அறிக்கைசெய்தார். அவர் கூறியதாவது:—"அங்கிலேய ராணுவ உத்தியோகஸ்தர்கள் ஓடிப்போவதில்லையென்று தங்கள் மனதைக் காக்கும் வாக்குக் கொடுத்திருந்தார்களானால், அவர்கள் அதை மீறார்; இதற்கு ஐயமில்லை. என் சொல்லை நம்பும்; அவர்கள் வாக்கு உறுதியானதென்று கொள்ளும்; அங்கிலேய ராணுவ உத்தியோகஸ்தர்

வாக்கு காவற்சேவகர் விழிப்பினும் அதிக உறுதியானது" என்று சொல்லியிருக்கிறார்.

ராணுவவீரர்.

உண்மையான தைரியமும் சாத்விகமும் ஒன்றுக்கொன்று இணையாகச் செல்லும். தீரன் உதாரமும் பொறையுமுள்ளவன், அவன் ஒருபொழுதும் பிறர்பிழை பொறுதிருப்பதுமில்லை, பிறருக்குக் குரூரஞ்செய்வதுமில்லை. "அவன் ஒருபொழுதும் அபாயத்திற்கு அஞ்சிப் புறங்காட்டியதில்லை. இப்படி இருந்தும் அவன் நெஞ்சு மிகவும் உருக்கமுள்ளது. ஒரு கொசுகையானாலும் துடைத்து விலக்க அவன் மனம் பொறாது" என ஸ்ரீ ஜான் பிராங்க்லின் என்பவனைக்குறித்து அவர் இஷ்டர் ஒருவர் சொல்லியது முற்றும் ஏற்கும். மேன்மக்கட்குரிய நற்குணங்கள் ஸ்பானியாவில் எல்போடன் என்னும் இடத்தில் நடந்த குதிரை ராணுவவீரர் சண்டையில் பிரான்சிய உத்தியோகஸ்தர் ஒருவரிடத்தில் விளங்கியது. ஸ்ரீ பெல்த்தன் ஹார்வியை வெட்டக் கத்தி ஓங்கின அவர் தம் மாற்றானுக்கு ஒரு கை இல்லையென்று கண்டு அந்தக்ஷணமே வெட்டுவதை நிறுத்தி ஓங்கின கத்தியை இறக்கி ஸ்ரீ பெல்த்தனுக்கு முற்பட்டு ராணுவமுறைப்படி உபசரித்துச் சென்றார். அந்தத் தீபகற்ப யுத்தத்திலேயே நே என்னுந் தளபதி செய்த பெருந்தன்மையும் சாத்விகமும் விளங்கும் ஒரு செய்கையை இதனுடன் பின்னும் ஓர் உதாரணமாய் எடுத்துக் காட்டலாம். அப்பொழுது சார்லஸ் நேப்பியர் பிராணாபாயமான காயம் பட்டுக் கொரூனாவில் சிறைப்பட்டார். அவர் இறந்ததும் இறவாதிருப்பதும் சீமையில் அவர் பந்துக்களுக்குத் தெரியாது. அவர் கதியை அறியும்படி இங்கிலாந்தினின்று தூதன் ஒருவன் ஒரு படைக்கப்பலுடன் வந்தான். க்லௌத் பரன் பிரபு தூதுவந்திருக்கும் செய்தியை நே சேனாதிபதிக்குத் தெரிவித்தார். அதுகேட்டுச் சேனாதிபதி: "வந்தவர்களைக் கைதியானவன் சிறைச்சாலையில் இருந்து கண்டு தன் க்ஷேமத்தையுந் தனக்கு நடந்துவரும் உபசாரத்தையும் அவர்களுக்குச் சொல்லட்டும்" என்று ஆக்கியாபிக்க, க்லௌத் தாமதித்து நின்றார். நே குறுநகையோடு "பின்னும் என்ன வேண்டும்?" என்று வினவ, விதவையாகிய அவர் தாய்க்குப் பருவம் முதிர்ந்து கண் கெட்டுப்போயிற்று" என க்லௌத் அறிக்கை செய்ய, நே "அவருக்குத் தாயார் இருக்கிறாரா? ஆனால் அவர் தாமே போய்த் தாயாரைக் கண்டு தாம் பிழைத்திருப்பதாகச் சொல்லட்டும்" என்று உத்தரவு கொடுத்தார். அக்காலத்தில் அவ்விரு தேசத்தாருங் கைதிகளைக் கொடுத்துமாறக் கட்டளை இல்லை. வாலிபராகிய ராணுவ உத்தியோகஸ்தனைச் சிறைநீக்கியதுபற்றி நப்போலியன் சக்கரவர்த்திக்குத் தம்மிடத்தில் வெறுப்புண்டாமென்று அவருக்குத் தெரியும்; ஆனாலும் சிந்தை கசிந்து செய்த அந்த உபகாரத்தைக் கேட்டு நப்போலியன் அவரை மெச்சினான்.

இவ்விந்தியாவில் அங்கிலேயர் காட்டிய பெருந்தன்மை.

சாதாரணமான சேவகரும் ஆபத்து விபத்து உண்டான சமயத்தில் மேன்மக்களென் ஐயந்திரிபற விளங்குவார்கள். ஆக்கிராவில் மாற்ருனுடன் நெருங்கிச் சண்டையிட்டபொழுது திரளான பெயர்கள் பரிதாபமாய் வெந்தும் வேறுவிதமாக ஊறுபட்டும் வருந்த, அவர்களைக் கோட்டைக்குள் கொண்டுபோய்ச் சேர்த்து அங்குள்ள துரைசானிகள் உள்ளக்கசிவோடு காயங்கட்டி உபசரித்தார்கள்; வீரத்தன்மையுள்ள கொடியராகிய ராணுவ சேவகரும் சிறுபாலகரைப்போலச் சாதுவாயிருந்தனர். துரைசானிகள் ஊறுபட்டவர்களைப் பலவாரம் உபசரித்து வரும்பொழுது, அம்மெல்லியாருள் அதிக தயையுள்ளவர்களுடைய செவி அதிரத்தக்க சொல் ஒன்றையும் அங்குள்ள சேவகன் ஒருவனும் ஒருபொழுதும் சொன்னதில்லை. ஆபத்தெல்லாம் தீர்ந்தபின், அதாவது பிராணுபாயமான காயம்பட்டவர்கள் இறந்து, வியாதிஸ்தரிலும் ஊறுபட்டவர்களிலுந் தப்பிப் பிழைத்தவர்கள் செய்ந்நன்றி மறவாதிருப்பதைத் திர்ஷ்டாந்த பூர்வமாய்க் காட்டத்தகும் அளவிற்குச் சொஸ்தமடைந்தபொழுது, தங்களை உபசரித்த மாதரையும் ஆக்கிராவிலுள்ள முக்கியமானவர்களையும் தாஜ் என்னும் அரண்மனையின் சிங்காரவனத்தில் விருந்துண்ண வரவழைத்து, புஷ்பாலங்காரம் செய்து கீதவாத்தியம் முழங்கும் அவ்விடத்திலே, ராணுவசேவகத்தில் அனுபவம் முதிர்ந்த அவ்வீரர்கள் அங்கமெல்லாம் காயவடுத்தோன்றக் கை கால் ஊனப்பட்டிருந்தும் எழுந்துநின்று, மிகுந்த ஆபத்துநேர்ந்த காலத்தில் தமக்கு உண்டியுடை கொடுத்துத் தங்குறைதீர்த்த சாதுக்களாகிய ஸ்திரீகளுக்கு நன்றிசொன்னுர்கள். ஸ்குத்தேரி வைத்தியசாலைகளிலும் காயம்பட்டவர்களும் பிணியுற்றவர்களுமாய்ப் பலர் தம்மை ஆதரித்த அங்கிலேய ஸ்திரீகளை வாழ்த்தினுர்கள்.

முப்பது வருஷங்களுக்குமுன்னே ஆப்பிரிக்காதேசத்துக்கடலில்

பேர்க்கேன் ஹேட் என்னும் ஆவிக்கலம் சேதப்பட்டவரலாறு

களில், சாமானிய மனிதருக்கு இப்பத்தொன்பதாம் நூற்ருண்டில் இருக்கும் ஆண்மைக்கு, மறவாது நெஞ்சகத்தில் எப்பொழுதும் நினைத்துக்கொள்ளத்தகும், பின்னும் ஒரு திர்ஷ்டாந்தம் விளங்குகின்றது. அது எக்காலத்தோரும் தமக்குப் பெருமையென்று கொண்டாடத்தக்கது. ஆப்பிரிக்காகண்டத்துக் கரையடுத்து ஓடிய அந்த ஆவிக்கலத்தில் ஏறிய புருஷர் 472 பெயர்; ஸ்திரீகளும் வாலிபரும் 166 பெயர். அந்தப் புருஷர் அப்பொழுது நன்னம்பிக்கைமுனை நாட்டில் சேவகம்செய்த சில பட்டாளத்தார். அவர்கள் முக்கியமாய் ராணுவ சேவகத்தில் சேர்ந்து அப்பொழுது சொற்பகாலந்தான் ஆயிற்று. பாதிராத்திரி ஆகி

இரண்டுமெணியளவிலே கீழ்த்தட்டில் எல்லாரும் நித்திரையாயிருக்கையில், கடலடியிலே மறைந்திருந்த பார்தாக்கிக் கலத்தின் அடியில் துவாரம் உண்டாகி அது கடலில் முழுகிப்போமென்று அச்சம் பிறந்தது. வேகமாய்ப் பறைமுழங்க, யுத்தவீரர் ராணுவ சிக்ஷைக்குக் கூடுமுறைமையாய் ஆயுதபாணிகளாகக் கலத்தின் மேல் தட்டில் . சேர்ந்தார்கள். ஸ்திரீகளையும் சிறுவர்களையும் தப்புவிக்கும்படி கட்டளைபிறந்தது. அகதிகளாகிய ஸ்திரீகளும் சிறுவர்களும் அறையினின்று மேலே கொண்டுபோய் வாய்பேசாமல் சிற்றோடங்களில் ஏற்றப்பட்டார்கள். அவர்களில் பெரும்பாலார் நித்திரைசெய்யும்பொழுது உடுத்த உடுப்போடிருந்தனர். சிற்றோடம் அனைத்தும் அவர்களை ஏற்றிக்கொண்டு கப்பற்பக்கத்தினின்று விலகியதன்மேல், மாலுமி "நீந்தமாட்டுவோர் எல்லோரும் கடலிற்பாய்ந்து சிற்றோடங்களைத் தொடர்ந்து நீந்திப்போங்கள்" எனச் சிந்தனையற்றுக் குரலெழுப்பிச் சொன்னார். அதுகேட்டு 91-வது ஹைலாந்தர் பட்டாளத்தைச்சேர்ந்த காப்தன் ரைட் "கூடாது, அப்படிச் செய்தால், ஸ்திரீகளோடு சிற்றோடங்கள் முழுகிப்போகவேண்டிவரும்" எனத் தடுத்துச் சொன்னார். தீராகிய ராணுவ சேவகர் நிலைபெயராது நின்றார்கள். சிற்றோடம் ஒன்றும் மிகுந்திருக்கவில்லை. அந்தக் கண்டத்தினின்றும் தப்பிப் பிழைக்கலாகுமென்று எண்ண இடமே இல்லாதிருந்தது; இந்த அவஸ்தையிலும் எவரும் மனமேங்கித் திகைக்கவில்லை. அந்தப் பிராணசங்கடமான வேளையில் ஒருவனும் செய்கடன் முடிக்கப் பின்னிடவில்லை. "கப்பல்முழுகி மறைந்துபோந்தனையும் அவர்கள் ஒரு சொல்லாவது குறைகூறவுமில்லை, கூச்சலிடவுமில்லை" என அந்தக் கண்டம் தப்பிப்பிழைத்த காப்தன் ரைட் சொன்னார். மரக்கலம் ஆழ்கடலில் மூழ்கியது; அலைக்குள் மறையும்போது அந்த வீரர்கள் எக்களிப்பாய்த் துப்பாக்கிப் பிரயோகம்செய்து அகாதத்தில் அமிழ்ந்துபோனார்கள்.

மேன்மக்களைப் பகுத்தறியும் குறிகள்

பலவுள. ஆயினும் அவற்றுள் தவறாப்பிரமாணம் ஒன்றுண்டு. அதாவது ஒருவன் தன் கீழ்ப்பட்டவர்கள்மீது அதிகாரம் செலுத்துவதும், பெண்சாதி பிள்ளைகளை அவன் உபசரித்தோ அபசரித்தோ நடத்துவதும், அதிகாரி தன் கீழ்உத்தியோகஸ்தரையும், யஜமானன் வேலைக்காரரையும், உபாத்தியாயன் மாணாக்கரையும், எந்தெந்தப் பதவியிலிருப்பவனும் தனக்கு இளைத்தவர்களையும் பரிபாலிப்பதுமாகிய இவைகளில் புத்திபூர்வமாகவும், பொறுமையாகவும், பட்சமாகவும் அதிகாரம் செலுத்திவருவதே சாதுக்களின் குறியை மயக்கமறச் சோதித்துத் தெளியும் பிரமாணமென்று எண்ணத்தகும். லேமொத்தி என்பவன் ஒருநாள் கும்பு

கூடிய ஜனத்துக்குள் செல்லும்பொழுது ஓரிளைஞனுடைய பாதத்தைத் தற்செயலாய் மிதிக்க, அவ்விளைஞன் அந்தக்ஷணமே அவன் முகத்தில் அறைந்தான். அறையுண்ட லேமொத்தி, "ஐயோ, அப்பா, நான் கண்ணில்லாத அந்தகனென்று உனக்குத் தெரிந்தால் அப்பொழுது இந்த அபகாரம் செய்ததற்காக நீ தவருமல் துக்கிப்பாய்" என்றுன். எதிர்க்க வல்லமை இல்லாதவர்களை வாயடித்து அதட்டுகிறவன் சாதுக்களைப்போல நடிப்பவனுய் இருந்தாலும் இருக்கலாம், ஆயினும் சாதுவாகமாட்டான். மெலியார் மீதும் அகதிகள்மீதும் கொடுங்கோல் செலுத்துவோன் பயங்காளியானுல் ஆவானேதவிர ஆண்மையுள்ளவன் ஆகான். கொடுங்கோல் மன்னன் அகம்புறமாகப் பெயர்ந்த அடிமையேயன்றி மற்றப்படியல்ல. மனநேர்மையுள்ளவனுக்குப் பலமும், தான் பலசாலியென்ற துணிவும் இருக்குமாயின், அது அவனுடைய குணங்களுக்கு ஒரு மேன்மை உண்டாக்கும். ஏனெனில், அவனே அதை வகை அறிந்து மிக்க சாவதானத்தோடு பிரயோகிப்பான். "இராட்சதனேடொத்த வலிமை இருப்பது மேன்மைதான்; ஆயினும் அந்த வலிமையை இராட்சதனைப்போலப் பிரயோகிப்பது கொடுமையாம்" என முன்னோர்களும் மொழிந்திருக்கின்றனர்.

சாந்தகுணம் மேன்மக்களுடைய யோக்கியதைக்கு உத்தம பிரமாணம் என்பது மெய்யே. தன்னில் இழிந்தோர், தன்னைச் சார்ந்தோர், தனக்கு ஒப்பாவோர் ஆகிய பிறருடைய மனதை வருத்தலாகாதென்று நினைவில் இருத்திக்கொள்ளும் இயற்கையும், அவர்கள் மானத்தை அபிமானிக்கும் இயற்கையும், சுத்தசாதுவின் ஒழுக்கம் அனைத்திலும் வியாபித்திருக்கும். அவன் பிறர் சொல்லுக்கு அல்லது செயலுக்கு அநீதியான அர்த்தம்பண்ணி மாபாதகன் ஆவதிலும், பிறரால் தனக்கு உண்டாம் அற்ப அபகாரத்தைச் சகித்துக்கொள்வான். அவன் தன்னைப்போல் அத்தனை பேறு பெருதவர்களுடைய அசக்தியையும் குறை குற்றங்களையும் பிழைகளையும் பொறுத்துக்கொள்வான். தனக்கு உதவும் விலங்கு ஜாதிக்கும் அவன் மனதிரங்குவான். அவன் தன்பாக்கியத்தையும் பலத்தையும் யோக்கியதையையும் குறித்து வீம்புபாராட்டான். கருமம் சித்தித்ததென்று அவன் மனம் பூரிப்பதுமில்லை, சிதறியதென்று மெத்தவும் குன்றிப்போவதுமில்லை. அவன் தன் அபிப்பிராயங்களைப் பிறருக்கு வலிந்து சொல்லான், ஆனுல் சமயத்தில் தன் மனக்கருத்தை ஒளிக்காமல் தாராளமாய் எடுத்துரைப்பான். அவன் கைம்மாறு ஒன்றை எதிர்பார்த்து ஒருவர்க்கு உபகாரம் செய்யான்.

அன்றன்று நடந்தேறும் அற்பமான லௌகிக வியாபாரங்களில் தன்னை மறுத்து, பிறரைத் தனக்கு மேலென்று நயந்துகொள்வதே சாதுவின் குணமெனச் சாத்தம் பிரபு சொல்லியிருக்கிறுர்.

"தங்குலை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்"

என்றபடி உதாரமதியுள்ளவர்களுக்கு முக்கியமாய்ப் பிறர்சுகத்தைப்போற்றும் ஆசையே அதிகமென்பதற்கு, ஆண்மையிற்சிறந்த ஸ்ரீ ரால்ப் அபர்க்ராம்பி என்பவரைக் குறித்துச் சொல்லிய கதை ஒன்றைத் திருஷ்டாந்தமாய் எடுத்துக்காட்டுவோம். அபுகிர் யுத்தத்தில் பிராணபாயமான காயம்பட்டபொழுது பௌதிராயந்து மரக்கலத்தில் அவரை ஒரு சிவிகையில் வைத்துக்கொண்டுபோய், நோக்காட்டைத் தணிவிக்க அவர் தலையின்கீழ் இராணுவசேகவன் ஒருவனுடைய கம்பளியை அணையாக வைத்தார்கள். அது அவருக்கு மிகவும் சுகமாயிருந்தது. தலையின்கீழ் வைத்திருக்கும் அணை என்னவென்று அவர்கேட்க, "அது மற்றொன்றுமல்ல, ஒரு போர்ச்சேவகன் கம்பளி" என்று உத்தரம் சொன்னார்கள். அதுகேட்டு அவர் எழுந்திருக்க உன்னிப் பாதி எழுந்து, "அது எவன் கம்பளி" என வினவ, "அது ஒரு சேவகன் கம்பளிதான்" என்று அவர்கள் மறுமொழிசொல்லக்கேட்டு, அவர் "இந்தக் கம்பளிக்கு உடையன் பெயரை அறிய விரும்புகிறேன் என அழுத்திக்கேட்க, அது 42-வது பட்டாளத்து டங்கன்ராயுடைய கம்பளி என மறுமொழிபிறந்தது. "அப்படியானால் இந்த இராத்திரியே டங்கன்ராயிடத்தில் அவன் கம்பளியைச் சேர்த்துப்போடுங்கள் எனக் கட்டாயமாய்த் திட்டம் செய்தார். தாம் மரணவேதனைப்படும் சமயத்திலும் அதைச் சிறிது ஆற்றும்படி ஒரு ராத்திரிகூட இராணுவசேவகனுடைய கம்பளியை எடுத்துவழங்க அவர் மனங்கொள்ளவில்லை.

சொற்சித்திரத்தாற் சிறந்த புராதனராகிய புல்லர் ஸ்ரீ ப்ரான்ஸிஸ் ட்ரேக் என்னும் பெரிய கப்பற் சேனாதிபதியின் குணம்குறிகளை விவரித்தெழுதிய சமயத்தில், முயற்சியைக் கைவிடாத மேன்மக்களுடைய குணங்களைப் பின்வருமாறு சுருக்கித் தொகுத்திருக்கிறார்:—அதாவது, "ஒழுக்கத்திற் புனிதர், வியவகாரத்தில் நீதியுடையவர், சொற்றவறாதவர், தங்கீழ்ப்பட்டோரிடத்தில் தாட்சிணியமுடையவர், சோம்புத்தன்மையை மற்றெதினும் அதிகமாக வெறுப்பவர்; விசேஷமாய், முக்கியமான காரியங்களில் பிறர் எத்தனை நம்பத்தக்கவர்களும் சமர்த்தருமாயிருப்பினும், அவர்களுடைய அவதானத்தை ஒருபொழுதும் நம்பியிராதவர்; அபாயத்தை எப்பொழுதும் அவமதித்து, எவ்வகைக் கஷ்டத்திற்கும் பின்னிடாமல், தீரத்தோடும் சாமர்த்தியத்தோடும் முயற்சிசெய்யவேண்டிய எந்தக் கருமத்திலும், துணைவர் எவரானாலும் சரி, தாமும் கண்ணும் கருத்துமாய் இருப்பவர்" என மொழிந்திருக்கிறார். இப்படிப்பட்ட மேலான குணமுள்ளவர்களே மேன்மக்களாவார்கள்.

நூறுவருஷங்களுக்குமுன்னே.

(தற்காலத்திற்கும் முற்காலத்திற்குமுள்ள பேதம்.)

தற்காலத்திற்கும் முற்காலத்திற்கும், அதாவது நெடுநாள் வேண்டாம், நூறுவருஷங்களுக்கு முற்பட்ட காலத்திற்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறதென்பதைச் சற்று யோசித்துப்பார்ப்போம். நன்றாக யோசித்தால் வெகு வித்தியாசமிருக்கின்றதெனத் தெளிவாகும். நூறுவருஷங்களுக்கு முன்னே இவ்விந்தியாவில் கைத்தொழில்களெல்லாம் வருந்திக் கையினாலேயே செய்யப்பட்டுவந்தனவேயொழிய, இப்போது இருப்பதுபோல விநோதமான பஞ்சாலை முதலிய எளிதில் வேலைசெய்யத்தக்க யந்திரங்களால் செய்யப்படவில்லை. வர்த்தக வியாபாரங்கள் விசேஷமாக நடந்தேறுவதற்கு அனுகூலமாய் நமது தேசத்துச் சரக்குகளைத் தேசாந்தரங்களுக்குக் கொண்டுபோகவும், தேசாந்தரத்துச் சரக்குகளை எளிதில் நமது தேசத்துக்குக் கொண்டுவரவும் இப்போதிருப்பதுபோலக் கப்பல் முதலான வழிகள் முற்காலத்தில் இல்லவேயில்லை.

நூறுவருஷங்களுக்குமுன் நீராவியந்திரமென்கிற பெயர் இத்தேசத்தில் தெரியவே தெரியாது. அக்காலத்தில் தூரதேசப்பிரயாணம் செய்வதென்றால், அதைப்போல அசாத்தியமான காரியம் வேறில்லை. இப்போதும் காசி ராமேசுவரம் என்கிறார்களல்லவா? காசிக்கும் ராமேசுவரத்துக்கும் போய்வந்தால், உலகமெல்லாம் சுற்றிவந்ததாக நினைப்பார்கள். இப்பொழுதோ நீராவியந்திரத்தினால் இழுக்கப்பட்ட இருப்புப்பாதை வண்டிகளின்மூலமாய்ப் பதினைந்து தினத்திலேயே காசி ராமேசுவரம் போய்வரலாம். முற்காலத்தில் நதிகளைக் கடந்துபோக வெகுவாய்ப் பாலங்களுமில்லை; ஓரிடத்தினின்றும் மற்றோரிடம் போக நன்றாய்ச் செப்பனிட்ட பாதையும் இல்லை; எங்கேபார்த்தாலும் கொள்ளைகளும் கலாபங்களுமே அதிகமாயிருந்தன.

நூறுவருஷங்களுக்குமுன்னே இவ்விந்துதேசத்தில் வெளிநாடுகளுக்குக் கடிதங்கள் அனுப்பத் தபால் என்பது இல்லவேயில்லை. அடுத்தக் கிராமத்துக்கு ஒரு செய்தியனுப்பவேண்டுமென்றாலும், அதற்கும் வெகு வருத்தப்படவேண்டியதாயிருந்தது. அதிசீக்கிரத்தில் ஒரு இடத்திற்கு அவசியமான செய்தி ஒன்று அனுப்பவேண்டுமென்றால், அக்காலத்தில் அதற்கு வழியேதுமில்லை. இப்பொழுதோ சீமைமுதலிய த்வீபாந்தரங்களுக்கும் செய்தியனுப்பத் தபால் மார்க்கமும், எவ்வளவு தூரமானாலும் நொடிப்பொழுதில் செய்தியெட்டத்தக்கதான தந்திதபாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

நூறுவருஷங்களுக்கு முன்னே இத்தேசத்தில் நியாயாநியாயங்களுக்குக் கேள்விமுறையில்லாதிருந்தது. அக்காலத்தில் "வைத்

தால் குடுமி, சிரைத்தால் மொட்டை." கொலையென்பது கிள்ளுக் கீரையாயிருந்தது. அக்காலத்தில் யாரோ சிலர்தவிர மற்றவர்க ளெல்லாம் கல்லாத மூடர்களாகவே இருந்தார்கள். வெகுகாலத் திற்குமுன்னமே நமது தேசத்தில் புத்தகங்கள் பலவாய் இயற்றப் பட்டிருந்தனவென்றாலும், அவை வேண்டியவர்களுக்குக் கிடைப் பது வெகு கடினமாயிருந்தது. அப்புத்தகங்களை யாரோ சிலர்மாத் திரமே வெகு அருமையாய்ப் பனையேடுகளில் எழுதிச் சேர்த்து வைத்திருப்பார்கள். அதைச் சேர்ப்பதற்குத் தாம் பட்ட பிரயாசை களை நோக்கி அவர்கள் பிறர்கையிற் கொடுத்தால் புத்தகம் எப்படியா குமோவெனப் பயந்து, பார்த்தெழுதிக்கொண்டு திருகிறேனென்று லும் புத்தகத்தைப் பிறர்கையில் கொடுக்கத் துணிவதில்லை. அதனால் கல்வியென்பது வெகு அருமையாயிருந்தது. இக்காலத்திலோ அப் படியின்றி அச்சுயந்திரங்கள் அநேகமாய் ஏற்பட்டுப் புத்தகங்கள் வாங்குவாரின்றி ஆயிரக்கணக்காய் அச்சிட்டுப் பிரசுரம்செய்யப் பட்டிருக்கின்றன.

நாற்பது ஐம்பதுவருஷங்களுக்குமுன்னே நமது தேசத்தில் கடி காயந்திரங்களுண்டா? இல்லை; கற்றறிந்தவர்கள் சூரியச்சாயையைக் கொண்டு பகலிலும், நக்ஷத்திரங்களால் இரவிலும் நாழிகையை நிதானி த்துவந்தனர். அவர்களும் ஆகாயத்தில் மேகம்மூடியகாலங்களில் என்னசெய்தார்களோ! ராஜாக்களின் அரண்மனைமுதலிய இடங்க ளில் ஒருவகையாய் அளந்த மணல்குப்பிகளைக் கொண்டாவது காலவளவைக் கண்டறிவார்கள்; தண்ணீர்த்தொட்டியிலே அடியில் ஒரு சிறுதுவாரம்செய்த பாத்திரத்தைப் போட்டு, அந்த துவாரத்தின் வழியாய்த் தண்ணீரேறி அந்தப் பாத்திரம் முழுகுகின்ற பொ ழுதைப் பார்த்தாவது கண்டறிவார்கள்.

முற்காலத்தில் எப்படிப்பட்ட தனவான்களும் ஏறிச் சவாரி செய்வதற்குப் பாதி உடம்பு வெளியிலும் பாதி உள்ளேயும் வைத்துக்கொண்டு போகத்தக்கதாய்த் தேர்போல நுனியில் குவி ந்த வெகு நெருக்கமான காடியென்னப்பட்ட ஒருவிதமான வண் டிகளையே வழங்கினார்கள். இக்காலத்திலோ வெகு சவுக்கியமாய் உடம்பு அசையாமல் ஏறிப்போகத்தக்க விசாலமான நான்குசக் கரமுள்ள வில்வண்டிகள் அநேகமாய் ஏற்பட்டிருக்கின்றன. நாலைந்து வருஷங்களுக்குமுன் இத்தேசத்தில் மகாக்ஷாமம் நேரிட்டபோது தேசாந்தரங்களினின்றும் லக்ஷோபலக்ஷமாய் அரிசிமூட்டைகள் கப் பல்களில் கொண்டுவரப்பட்டு, இருப்புப்பாதை வழியாய் இச் சென்னைநாட்டில் பலவிடங்களுக்கும் கொண்டுபோகப்பட்டனவே. கப்பல்மார்க்கமும் இருப்புப்பாதை வழிகளும் ஏற்படுவதற்கு முன் இத்தேசத்தில் அத்தன்மையான பஞ்சம் நேரிட்டிருக்கு மாயின், இத்தேசத்தார் எப்பாடுபட்டுப்போவார்களோ? முற்கா

லத்திலேயே இவ்விந்துதேசம் மற்றத் தேசங்களைப்பார்க்கிலும் நாகரிகத்தில் சிறப்புற்றிருந்ததென்றாலும், இவ்வங்கிலேயருடைய அரசாட்சி துவக்கியநாள்முதல் மேற்குறித்த பலவிஷயங்களிலும் விசேஷமாக விருத்திபெற்றுவருகின்றது.

இவ்வேற்றுமை நமது இந்துதேசத்துக்கு மாத்திரமேயல்ல; வர்த்தக வியாபாரங்கள் கைத்தொழில்கள் நாகரிகம் முதலிய எல்லாச் சிறப்புகளிலும் இப்பொழுது தனக்கு ஒப்புயர்வில்லாத சீர்பெற்ற நாடாகிய சீர்மையென்று வழங்கும் இங்கிலாந்து தேசத்தினது முற்காலநிலைமையை யோசித்தால், அக்காலத்தில் இவ்விந்துதேசம் அதைப்பார்க்கப் பதினாயிரம்பங்கு பெருமைபெற்றிருந்ததென்னலாம். நூறுவருஷங்களுக்குமுன் இங்கிலாந்தில் கைத்தொழில் என்கிற பெயரே தெரியாது. நெல், ஆட்டுரோமம், சணல் இவைதவிர மற்றப் பொருள்களெல்லாம் அவர்களுக்குத் தேசாந்தரங்களிலிருந்து வந்தே யாகவேண்டும்; ஸ்பானியா, ஜர்மானியா, ருஷியா முதலிய தேசங்களினின்றும் இரும்பு வரவழைக்கப்பட்டது; உலாந்தாவிலிருந்து மட்கலங்கள் அழைப்பிக்கப்பட்டன; பிரான்சு தேசத்திலிருந்து பட்டு அழைப்பிக்கப்பட்டது; பெல்ஜியத்திலிருந்து வஸ்திரங்களும் கம்பளங்களும் அழைப்பிக்கப்பட்டன. இவைகட்கெல்லாம் இத்தேசத்தார் தேசாந்தரத்தை எதிர்பார்க்கவில்லையே. பருத்தியாடை, கம்பளம், சணல்வஸ்திரமுதலியன நெய்வதும், யந்திரங்கள் செய்வதும் இப்படிப்பட்டதென்று இங்கிலாந்தார்க்கு அப்பொழுது தெரியவே தெரியாது.

நூறுவருஷங்களுக்குமுன்னே இங்கிலாந்தார்க்கு நீராவியந்திரம் செய்யவும் தெரியாது; பாலங்கள் கட்டவும் தெரியாது. கப்பல்கள் மாத்திரமிருந்தனவென்றாலும் கப்பல் ரக்ஷணஸ்தானங்களும், கப்பல்கட்டுமிடங்களுமில்லை. கொள்ளைகள் எங்கும் அதிகமாயிருந்தன; கொள்ளையென்றால் பொருள்கொள்ளைமாத்திரமேயல்ல; மனிதர்களைக் கொள்ளைகொள்வதும் விசேஷமாயிருந்தது. நடுப்பகலிலேயே தெருவில் போகிறவர்களைப் பிடித்துக் கப்பலேற்றித் தேசாந்தரங்களுக்கு அனுப்பிவிடுவார்கள். நூறுவருஷங்களுக்குமுன் ஜேம்ஸ் வாட் என்பவன் லந்தன்நகரில் ஆயுதங்கள் செய்யக் கற்றுக்கொண்டிருக்கும்போது, தன்னைப் பிடித்து இந்தியாவுக்காவது அமெரிக்காவுக்காவது அனுப்பிவிடப்போகிறார்கள் என்ற பயத்தினால் அவன் வீட்டைவிட்டு வெளியே புறப்படுவதில்லையென்கிறார்கள். இப்படிப்பட்ட அநியாயங்களெல்லாம் நமது தேசத்திலிருந்ததில்லையே.

நூறுவருஷங்களுக்குமுன்னே வெகுவாய் அத்தேசத்தவரெல்லாம் கல்லாத மூடர்களே; அங்கே படித்த பண்டிதர்களும் கிடையா; படிக்கப் புத்தகங்களும் கிடையா; புத்தகங்களை அச்சிடும் யந்திர

மும் வெகு அருமையாயிருந்தது. உயர்ந்தவகுப்பினர்களும் குடியும் கெட்டநடத்தையும் உடையவராயிருந்தனர். பரிதானம் வாங்குவது பகிரங்கமாகவே நடந்துவந்தது. சாதாரணமாய் எத்திறத்தோரும் வேடிக்கைக்காக மனிதர்சண்டை, கோழிச்சண்டை, மாட்டுச்சண்டை முதலியவை செய்வித்துப் பார்த்துக் களித்துவந்தனர். இத்தன்மையாயுள்ள தம் முன்னோர்களுடைய பல சரிதைகளை நினைக்க, இக்காலத்தவர்கள் மிகவும் வெட்கமடைகிறார்கள்.

இங்கிலாந்துக்கு உண்டான எல்லாச் சிறப்புகளும் சென்ற நூறு வருஷங்களாகத்தான். ஜேம்ஸ் வாட் நீராவியந்திரம் கண்டுபிடித்தது இக்காலத்திலேதான். அது கண்டுபிடித்தபிறகு தான் புதிதாய்ப் பல வேலைகள் ஏற்பாடாகி அநேகமாயிரம் பிரஜைகளுக்குத் தொழில் கிடைக்கும்படியாயிற்று. பிறகு இரும்புக்காகப் பிறதேசங்களை எதிர்பாராமல் அத்தேசத்திலேயே வேண்டிய இரும்பு வெட்டி எடுத்துக்கொள்ளும்படியான வழிகளைக் கண்டுபிடித்தார்கள். இந்நூற்றாண்டிலேதான் இங்கிலாந்தைச் சுற்றிப் பல கப்பல் ரக்ஷணஸ்தானங்களும் கப்பல்கட்டும் இடங்களும் நிருமிக்கப்பட்டன. சென்ற ஐம்பது வருஷத்திலேதான் நீராவிப்படவுகள் இருப்புப்பாதை வண்டி, மின்தபால் முதலியவெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு வழங்கலாயின.

இந்துக்கள் உண்மைபேசுகிறவர்களா?

இவ்விந்தியாவுக்கு வரும் அங்கிலேய உத்தியோகஸ்தர்கள் இந்துக்கள் பொய்பேசுகிறவர்களென்று நியாயசபையில் அடிக்கடி எடுத்துரைப்பதைக் கேட்க நமக்கு மிகவும் விசனமும் வெட்கமும் உண்டாகிறது. ஆயினும் அவர்களின் அபிப்பிராயத்துக்கு எதிரெடையாக இப்போது மாக்ஸ் மூல்லர் என்னும் அங்கிலேய ஸம்ஸ்கிருதபண்டிதர் இந்துக்கள் சத்தியவந்தர்கள் என்று பகிரங்கமாய் அபிப்பிராயங்கொடுத்திருப்பது நமக்கு வெகு சந்தோஷத்தைக் கொடுக்கத்தக்கினது. மாக்ஸ்முல்லர் ஒருவர் அபிப்பிராயமும் சரி, இங்கிருக்கும் அங்கிலேய உத்தியோகஸ்தர்கள் ஆயிரம் பேர் சொல்லுகிற அபிப்பிராயமும் சரி. மாக்ஸ்முல்லர் மகா பண்டிதர். சென்ற நாற்பதுவருஷகாலமாய் இந்தியாவே தியானமாய் இருப்பவர். உலகமுழுவதும் அவர் பேரும் கீர்த்தியும் பிரசித்தமாயிருக்கிறது. அப்படிப்பட்ட பண்டிதர் சொல்லும் அபிப்பிராயம் வெகு சிரேஷ்டமானதல்லவா? அவர் இதைப்பற்றிச் செய்திருக்கும் பிரசங்கம் முழுமையும் தமிழில் மொழிபெயர்த்து அச்சிடுதல் வெகு உபயோகமானதாயினும், அதின் தாற்பரியத்தைமட்டும் இங்கே சுருக்கிச் சொல்வோம். இந்தியாவுக்கு வரும் இங்கிலீஷ்கா

ரருக்குள் இந்துக்கள் பொய்யர் என்ற அபிப்பிராயம் பரவியிருக்கிறதாக விசனப்பட்டு மாக்ஸ்முல்லர் சொல்லுகிறார்:

"கல்கத்தாவிலும் பம்பாயிலும் சென்னபட்டணத்திலும் நியாயஸ்தலத்தில் வரும் சில இந்துக்களும், உத்தியோக சாலைகளிலும் கடைவீதிகளிலும் திரியும் சிலரும், யோசனைசெய்யாமலும் பயப்படாமலும் பொய்பேசுகிறார்களென்ற காரணத்தால் எல்லா இந்துக்களும் பொய்யர்கள் என்று சொல்லிவிடலாமா? இந்தநாளில் சகலவிஷயத்திற்கும் நியாயமும் ருசுவும் கேட்கிறார்களே. மேலும் இந்தியாவில் முன் எடுத்த சென்ஸஸ் (குடிமதிப்பு) கணக்கின்படி 25 கோடியே 30–லக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்களே. தகுந்தநியாயம் ஒன்றுமில்லாமல் இவ்வளவு தொகையுள்ள ஒரு ஜாதியாரை முற்றும் பொய்யர் என்று சொல்வது துர்க்கட்சியல்லவா? மேலும் ஆயிரம் வருஷத்துக்கு முன்னால் சில கிரேக்குதேசத்து ஜாதியாரும், சீனதேசத்தாரும், போர்த்துகல் தேசத்தாரும், மகம்மதியரும், கிறிஸ்தவர்களும், இந்தியாதேசத்தை வந்துபார்த்து, இங்கிருக்கும் ஜனங்களைப்பற்றித் தங்கள் அபிப்பிராயத்தை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் இந்துக்கள் பொய்யர்கள் அல்லவென்றுமாத்திரம் எழுதவில்லை; இந்துக்கள் சத்தியத்துக்கு உயிரைக்கொடுக்கிற ஜாதியார் என்று உறுதியாய்த் தங்கள் அபிப்பிராயத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் ஒன்று; சென்ற எண்ணூறு வருஷகாலமாய் இந்துக்களுடைய சத்தியம் முன் இருந்ததுபோல் இப்பொழுது அவ்வளவு உறுதியாயிருக்கவில்லை. ஆயினும் அதற்காக நான் ஆச்சரியப்படவில்லை; மகம்மதிய ராஜ்யத்தின் கொடுமைகளையும் அநீதிகளையும்பற்றி நான் வாசித்தபிறகு இந்துக்கள் இன்னும் இவ்வளவு சத்தியவந்தர்களாய் இருக்கிறார்களாவென்று ஆச்சரியப்படவேண்டியதாயிருக்கிறது. பூனையின் முன்னால் எலி நிஜம்பேசுமா? அப்படியே மகம்மதிய அதிகாரிகள் முன்னால் இந்துக்கள் நிஜம்பேசுவது அரிது. குழந்தையைப் பயமுறுத்தினால் பொய்சொல்லும்; லட்சக்கணக்கான ஜனங்களைக் கொடுங்கோல் செலுத்தி ஆண்டுவந்தால் கொடுங்கோலுக்குத் தப்ப எத்தனப்படுவது ஆச்சரியமோ!" என்கிறார். ஆகையால் இப்போது இந்துக்கள் மகமதியர்களின் கொடுமைக்குப் பயந்து பொய்பேச நேரிட்டு முன்னிருந்த சத்தியத்தில் சிறிதளவு குறைவுபட்டிருந்தபோதிலும், அநேகமாயிரம்பேர் இன்னும் சத்தியத்தைக் கைவிடாதிருக்கின்றனர். அப்படியிருக்க அங்கிலேயர் இந்துக்களெல்லாம் பொய்யரென்று வாய்க்கெளிதாய்ச் சொல்லிவிடுகிறார்களே, அதற்கு யாதுகாரணமோ யாமறியோம்.

சமாசாரம்.

ரிப்பன் பிரபு நமது தேசத்துக்குச் செய்துவரும் நன்மைகள்.—இத்தேசத்தில் விசேஷமாகக் கல்வியபிவிர்த்தி செய்யுமாறு உயர்ந்தோர் தாழ்ந்தோரென்றில்லாமல் யாவர்க்கும் கல்விகற்பிக்கவேண்டுவது அவசியமென்று தேர்ந்து, இத்தேசத்துக் கல்விநிலையை அங்கங்கே போய் விசாரித்துவரும்படி இந்தப் பிரபு ஒரு சங்கத்தாரை நியமித்திருக்கிறார். மேலும் பஞ்சாப்பில் சர்வகலாசாலைச் சங்கமொன்று ஸ்தாபித்தார். சிலவிடங்களில் தெருப்பள்ளிக்கூடங்களிலும் சென்று கல்வியின் நிலைமையைத் தாமே விசாரிக்கின்றனராம்.

மேலும் இத்தேசத்தார் ராஜாங்ககாரியங்களில் விருத்தியடையும்பொருட்டு நாடுநகரங்களின் பாலனுதிகாரத்தை அவரவர்களே பார்த்துக்கொள்ளும்படி தீர்மானித்திருக்கிறார். பயிரிடும் குடிகளுக்குத் தக்காவிகொடுக்கவேண்டியதைப் பற்றிப் புதியசட்டமொன்று ஏற்படுத்த நிச்சயித்திருக்கிறார். உப்புத்தீர்வையைக் குறைத்திருக்கிறார். லக்ஷ்மணபுரி முதலான விடங்களுக்குப் போய் ஜனங்களுக்கு உபயோகமான விஷயங்களையெடுத்து உபந்நியாசம் செய்துவருகிறார். இவைமுதலிய நன்மைகள் செய்துவருவதற்காக இந்தப் பிரபுவினுடைய பெயரை நாம் என்றும் மறவாதிருக்கும்பொருட்டுத் தற்காலம் சிம்லாவில் சில பிரபுக்கள் சேர்ந்து அவர் பெயரால் ஒரு வைத்தியசாலை கட்டுவிக்க நிச்சயித்திருக்கிறார்கள்.

தபால்முத்திரைத் தலைகளும் ரசீதுமுத்திரைத் தலைகளும்.—தபால்களுக்கு ஒட்டும் முத்திரையில்லைகளையும், ரசீதுகளுக்கு ஒட்டும் முத்திரையில்லைகளையும் ஜனங்களுடைய சவுக்கியத்துக்காக ஒன்ருய்ச் செய்துவிடலாமாவென்று யோசித்து இந்திய துரைத்தனத்தார் அதைப்பற்றிக் குடிகளுடைய அபிப்பிராயத்தைக் கேட்டதற்கு, சிலர் இவ்விரண்டையும் ஒன்ருய்ச் சேர்ப்பது ஸாதகமென்றும், சிலர் பாதகமென்றும் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள். இரண்டையும் ஒன்ருக்குவது கூடாதென்று சொல்லுகிறவர்கள், தபாலாபீசுகளில் முத்திரையில்லை விசேஷமாய்த் திருட்டுப்போக நேரிடுமென்று பயந்தே அப்படி அபிப்பிராயப்படுவதாகத் தெரியவருகிறது. ஆனல் இப்போது அதிகமாய் அப்படித் திருட்டுப்போவதில்லை. மேலும் இப்போது கடிதம் வைக்கவேண்டிய உறைகளின்மேலேயே துரைத்தனத்தார் அரையணு முத்திரை பதித்திருப்பதுபற்றி, அரையணுமுத்திரை வேண்டியவர்கள் அவ்விதமான உறைகளையே உபயோகிக்கலாமாகையால், முத்திரைகள் திருட்டுப்போகுமென்று அஞ்சுவதற்கு அதிகமாய் இடமில்லை. மேலும் ரசீதுக்காக உபயோகிக்கும் முத்திரைகளை ஏதாவது ஒரு ஆயுதத்தைக்கொண்டு மத்தியில் இப்போது வழங்குகிற கோர்ட்டுபீஸ்டாம்புகளைப்போல் துவாரம்செய்யவேண்டுமென்று உத்தரவுசெய்துவிட்டால், அத்தனையாகப் பிசகுகள் நேரிடுவதற்கு இடமிராது. ஆதலால் இவ்விரண்டு முத்திரைகளையும் ஒன்ருக்குவதே உசிதமெனப் பலபேர் அபிப்பிராயப்படுகின்றனர்.

யானைக்கொலை.—தந்தங்கள் விசேஷமாக வேண்டுமென்று இப்போது ஆப்பிரிக்காதேசத்திலுள்ள யானைகளை ஏராளமாய்ப் பிடித்துக் கொலைசெய்துவருகிறார்கள். சிலர் தாம் வேட்டையாடுவதில் சவுரியமுள்ளவர்களென்று

காண்பிப்பதற்காக யானைகளைச் சுடுகிறார்கள். இப்படி யானைகளைக் கொல்வதனால், நாளளவிலே உலகத்தில் யானைகளே இல்லாமல் ஒழிந்துபோகுமோவென்று அஞ்சவேண்டியதாகின்றது.

எகிப்துகலகம் சாந்தமானது. — இப்போது எகிப்துதேசத்துக் கலகம் முற்றும் சாந்தமாகிவிட்டது. அந்தக் கலகத்தில் பராக்கிரமம் காட்டி ஜயங்கொண்ட சேனாவீரர்விஷயத்தில் பார்லிமெந்துசபையார் மிகவும் நன்றியுடையவராகிச் சபையில் அவர்களை மிகப் புகழ்ந்துபேசினார்கள்.

பர்லின்நகரத்துக்கு வந்திருந்த அங்கிலேய ஸ்தானாபதியின் மூலமாய் ஜர்மானியாதேசத்துச் சக்கரவர்த்தியானவர், எகிப்துதேசத்துக் கலகத்தை அடக்கும் விஷயத்தில் ஏற்ற உபாயம்செய்து ஜயம்பெற்றதற்காக ஸர் கார்னெட் ஊல்ஸ்லி என்னும் சேனாபதியைப் பெருமையாகப் புகழ்ந்து கொண்டாடினார்.

மேற்படி யுத்தத்துக்காகச் சென்ற இவ்விந்துதேசத்துச் சேனை 5000-த்துக்கு ஒருகோடி பதினான்கு லக்ஷம் ரூபாயும், அங்கிலேய சேனை 25,000-த்துக்கு ஒருகோடி அறுபத்தினான்கு லக்ஷம் ரூபாயும் செலவுபிடித்ததாம். நம் மகாராணியாருடைய பிரதான மந்திரியாகிய கிளாட்ஸ்ட்டன் துரையவர்கள் இந்திய சேனைக்காகச் சென்ற செலவைப்பற்றி இந்தியா துரைத்தனத்தார்க்கு வருத்தம் கொடுக்கலாகாதென்று அபிப்பிராயப்பட்டார்போலும்.

கலகம் அடங்கியபிறகு எகிப்துதேசத்தில் அங்கிலேயருடைய சேனைகள் செய்த காரியங்களுக்காக அவைகளுக்குப் பிடித்த செலவில் ஒருபங்கு எகிப்துதேசத்தார் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

எகிப்துதேசத்துக் கலகத்துக்கு முதற்காரணமாயிருந்த அரபியைப்பற்றி விசாரணை முடிவாயிற்று. விசாரணைச் சங்கத்தார் அவரைத் தூக்கிடுவதே அவர் செய்த குற்றத்திற்கு ஏற்ற தண்டனையெனத் தீர்மானித்தனராம்.

திருவநந்தபுரம் மகாராஜா.—திருவநந்தபுரத்து மகாராஜாவாகிய ஸ்ரீராமவர்மாவுக்கு ஜி. ஸி. எஸ். ஐ. பட்டம் கொடுக்கப்போகிறார்கள்; அதற்காக அம்மகாராஜாவும் பெரியராணியார் சின்னராணியார்களும் சென்னபட்டணத்துக்கு மேல்மாதம் வருவார்களாம்.

பத்திரங்கள் ரெஜிஸ்தர் செய்வது.—இப்போது ஒத்திப்பத்திரங்களை மாத்திரம் ரெஜிஸ்தர்பண்ணுகிற வழக்கமாயிருக்கிறது; ரசீதுகள், ஒத்தி நிவிர்த்திப் பத்திரங்கள், அடைமான பத்திரங்கள் இவைகள் ரெஜிஸ்தராக வேண்டிய கட்டாயமில்லை; இனி இவைகளும் ரெஜிஸ்தராகவேண்டியது கட்டாயமென்று உத்தரவுசெய்யப்பட்டிருக்கிறது.

நாடுநகரங்களின் பாலனாதிகாரம். — மேற்படி அதிகாரவிஷயமாய் கவரன்மெண்டார் நியமித்திருக்கும் கமிட்டிக்கு ஸர்ஜன் ஜெனரல் கார்நிஷ் துரையைப் பிரசிடெண்டாக நியமித்திருக்கிறார்கள். முன்னே பிரசிடெண்டாயிருந்த மேஸ்தர் எஸ். தாமஸ் துரை கல்கத்தாவுக்கு கவர்னர் ஜனரல் அவர்களின் சட்டநிரூபணச்சபைக்கு ஒரு அத்தியக்ஷராகப் போயினார்.

C. K. S. Press, Vepery, Madras, 1882.